பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 02, புதன்கிழமை 15.02.2017 கதிர் 102

## கூட்டு எதிரணியினர் மீது சு.க. நடவடிக்கையாம்!

கூட்டுஎதிரணியில்செயற்படும் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கட்சியின் செயற்குழு தனது அடுத்த கூட்டத்தில் ஆராய்ந்துமுடிவுசெய்யும். கட்சியின்பொதுச்செயலாளர்அமைச்சர் மஹிந்த அமரவீர இத்தகவலை வெளியிட்டார்.

# சசிகலா குற்றவாளி!



## 10 ஆண்டுகளுக்கு பதவி வகிக்க முடியாது

## ரூ.10 கோடி அபராதம்; 4 ஆண்டுகள் சிறை

சென்னை, பெப்.15

சொத்துக்குவிப்புவழக்கில்சசிகலாவும் மற்றும் மூவரும் குற்றவாளிகள் என அறிவித்த புதுடில்லி உச்ச நீதிமன்றம், அவர்கள் மூவருக்கும் தலா 10 கோடி ரூபா அபராதமும், நான்கு வருடச் சிறைத் தண்டனையும் விதித்து பொங்களூர் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனை முழுஅளவில்செல்லும்என்றும் அறிவித்தது.

அதனால், தமிழக முதல்வராகும் சசிகலாவின் கனவு தகர்ந்தது. அவர் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிப்பதோடு, அதனால், அதைத் தொடர்ந்து பிறகு ஆறு ஆண்டுகளுக்கு அரச பதவிகள் எவையும் வகிக்கும் தகுதியையும் இழக்கின்றார். அதனால், அடுத்த பத்து ஆண்டுகளுக்குத் தேர்தல் மூலம் தெரிவாகும் எந்தப் பதவிக்கும் தகுதி இல்லாதவராக அவர் ஆகியுள்ளார்.

புதுடில்லியில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தமது தீர்ப்பை நேற்றுக் காலை வாசித்து இரண்டொரு நிமிடங்களுக்குள், சென்

பக்கம் 18 »

# அதிகாரத்தைப் பகிர அரசுடன் பேசுவோம்!

## சுமந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்.15

அர்த்தமுள்ள வகையில் அதிகாரத்தைப் பகிரும் வேலைத்திட்டம் தொடர்பாக அரசுடனும் பிற தரப்புகளுடனும் கலந்துரையாடத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு வழங்கியநேர்காணலின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதிய அரசமைப்பை நிறைவேற்றும்போது அதற்காகப் பொதுக் கருத்துக்கணிப்பு

பக்கம் 18 »

# ஏழு லட்சம் மக்கள் வறட்சியால் பாதிப்பு!



கொழும்பு, பெப்.15

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் 7 லட்சத்து 9 ஆயிரத்து 400 பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என இடர் முகாமைத்துவ மையம் நேற்றுத் தெரிவித்தது.

கம்பஹா, பக்கம் 18 »

# முதல்வர் உரிமை கோருகிறார் எடப்பாடி பழனிச்சாமி



## சசிகலா அணி அவரைத் தெரிவு செய்தது

சென்னை, பெப்.15

சசிகலா குற்றவாளி என நீதிமன்றம் அறிவித்த கையோடு, கூவத்தூர் விடுதியில் அ.தி.மு. கழக எம்.எல். ஏக்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த சசி கலா அணி, அவர்களைக் கொண்டு அ.தி.மு.கவின் சட்டமன்றக் குழுத் தலைவராக அமைச்சர் எடப்பாடி பழனிச் சாமியைத் தேர்ந்தெடுத்தது.

குற்றத் தீர்ப்புக்கு உள்ளாகியுள்ள சசிகலாவின் இடத்துக்கு எடப்பாடி பழனிச்சாமியை சட்டமன்றக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கின்றமை

பக்கம் 18 »

## பொன்சேகாவின் எம்.பி.பதவிக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, பெப்.15

அமைச்சர்பீல்ட்மார்ஷல்சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத்தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் நேற்றுப் பரிசீலித்

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்




# பன்னீர் அணியும் விடுவதாயில்லை!



சென்னை, பெப்.15

சசிகலாவுக்கு குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னரும், அ.தி.மு. கழக சட்டமன்ற உறுப்பினர்களில் அதிகமானோர் சசிகலா அணியின் பிடியில் இருக்கின்றனர் என்று கூறப்பட்டுள்ள போதிலும், எதிர் தரப்பில் தற்போதைய பொறுப்பு முதலமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வத்தின் அணி விவகாரத்தை விட்டு விடுவதாயில்லை.

அ.தி.மு.கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள்சசிகலாஅணியினரால் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ள பன்னீர்ச்செல்வம் தரப்பு, அவர்கள் விடுவிக்கப்பட்டால் அவர்களில்பெரும்பாலானோர் பன்னீர்ச் செல்வத்தையே ஆதரிப்பர் என்று தெரிவித்துள்ளது.

அதனால் ஆட்சி அமைத்து சட்ட சபை பக்கம் 18 »

# கேப்பாபிலவு காணிகளை விடுவிக்க இணக்கமாம்!



முல்லைத்தீவு, பெப்.15

கேப்பாபிலவில் மக்களின் காணிகள் விரைவில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

இந்தத் தகவலை மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தம்மிடம் தெரிவித்தார் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பிலக் குடியிருப்பு மக்களைச்

பக்கம் 18 »

# ஆளுநர் என்ன செய்வார்?



சென்னை, பெப்.15

தமிழகத்தில் ஆட்சி அமைப்பதற்கு அ.தி.மு.கவின் இரண்டு அணிகள் - முறையே எடப்பாடி பழனிச்சாமி மற்றும், ஓ.பன்னீர்ச் செல்வம் ஆகியோர் தலைமையில் - உரிமை கோரியுள்ள நிலையில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து தமிழக ஆளுநர் மூன்று சட்ட நிபுணர்களுடன் விரிவான ஆலோசனையில் நேற்று ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இருதரப்பையும்ஒன்றாகஅழைத்து சட்ட சபையில் தங்களின் பலத்தை நிரூபிக்கும்படி கோர பக்கம் 18 »

# செட்டிக்குளம் தனியார் காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும்

## பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, பெப்.15

செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர்வசமுள்ளதனியார் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்று முன்தினம் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாத் பதியுதீன், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இந்தப் பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள், வீட்டுத்திட்ட பிரச்சினைகள், வீதி புனரமைப்பு, குடிதண்ணீர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. அத்துடன் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அருவித்தோட்டம் உள்ளிட்ட பல்வேறு பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வளப்பற்றாக்குறை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.



வவுனியா, செட்டிக்குளம் பிரதேச செயலக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மக்களது தேவைகள் குறித்து ஆராயப்பட்டது.

செட்டிக்குளம் பகுதியில் கைத்தொழில்களை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், அப்பகுதியில் மூடப்பட்ட நிலையில் உள்ள பப்படத் தொழிற்சாலையை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன்போது அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்திருந்தார்.

இதேதேவளை, செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் வசமுள்ள தனியார் காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என் இக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர்களான இ.இந்திரராசா, செ.மயூரன், ம.தியாகராசா, ம.ஜெயதிலக, அரச அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

### பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட இலங்கை சாரணியர் மன்றத்தின் பெண் சாரணிய வழிகாட்டுநருக்கான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த பெண் சாரணியாளர்களைக் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் திருமதி.நீ.தர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார். (இ)

## இன்று வடக்குக்கு வருகிறார் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்

கொழும்பு, பெப்.15

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவின் தூதுவர் டுங்- லாய் மார்க் இன்று வட மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவர் இன்று முதல் 17 ஆம் திகதி வரை வட மாகாணத்தில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரை சந்தித்து பேச்சுமேற்கொள்ளவுள்ளார்.

இதற்கமைய இன்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச்சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்தின் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவில் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப் பட்ட செயற்றிட்டங்களைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் பார்வையிடவுள்ளார். இதேவேளை, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தூதுவர் டுங்-லாய் மார்க்குடன் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் உனா மெக்கோலேயும் இணைந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெங்கு உற்பத்திக்கான சூழல்; மன்னார் டிப்போவுக்கு வழக்கு!

### முகாமையாளருக்கு சரீரப் பிணை

மன்னார், பெப்.15

டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடமாக இனங்காணப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார் சாலை முகாமையாளருக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் முகாமையாளர் ஐம்பதாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மன்னார் பகுதியில் டெங்கு நுளம்பு அபாயம் தோன்றியிருப்பதைத் தொடர்ந்து மன்னார் சுகாதார பகுதியினர் முக்கிய இடங்களில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய மன்னார் சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரியின் வழிகாட்டலின் கீழ் மன்னார் நகர வடக்கு சுகாதார பரிசோதகருடன் பொது சுகாதார பரிசோதகர்கள் மன்னார் எழுத்தூரில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார் சாலையைப் பரிசோதித்தவேளையில் அங்கு டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் சூழ்நிலை காணப்பட்டது. அதை அடுத்து முகாமையாளருக்கு எதிராக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.கடந்த வியாழக்கிழமை நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்தப் பிணை வழங்கப்பட்டது. (ஐ-112)




World Class UK Degree @ICBT Jaffna Campus

Accredited by EQAA European Quality Assurance Agency

Apply now for New Intake 2017

ICBT HND IN BUSINESS MANAGEMENT

Finance/ Marketing/ Human Resource Management

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications: GCE A/L + Work Experience

BSc (Hons) BUSINESS MANAGEMENT

Offered by Cardiff Metropolitan University, UK

Cardiff Metropolitan University

Duration
- 1 year

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

UGC

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes — TVEC REGISTERED

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA — 5/30, Hospital Rd., Jaffna. Tel: (+94)214 333 888 Fax: (+94)654 377 890 Email: jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013 Gold Award Winner Education Service Sector

www.icbt.lk



மணமக்கள் விபரம்

☎ 0777164524

திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m

சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| **6999 \| வே**<br>1974 \| சுழிபுரம் \|168 cm<br>Business \| இலங்கை<br>அஸ்வினி (மேடம்) \| கி.பா: 18 | **3796 \| ந**<br>1993 \| அச்சுவேலி \| 157 cm<br>Beautician \| இலங்கை<br>பூசம் (கடகம்) \| கி.பா: 40\|செ: 8 |
| **7080 \| வே**<br>1977 \| மல்லாகம்<br>Business \| இலங்கை<br>கார்த்திகை (ரிஷபம்) \| கி.பா:72 | **5207 \| வே**<br>1981 \| வேலணை \| 160 cm<br>Beautician \| இலங்கை<br>உத்தரம் (சிம்மம்) \|கி.பா: 44\|சூரி செ: 3 |
| **7207 \| வே**<br>1978 \| நீர்வேலி \| 165 cm<br>Business\| இலங்கை<br>பூராடம் (தனுசு) | **6939 \| ப**<br>1981 \| அச்சுவேலி \| 167 cm<br>Beautician \|இலங்கை<br>பூசம் (கடகம்) \|செ: 4 |
| **6956\| வே**<br>1978 \| கண்ணாகம் \| 180cm<br>Business,\| இலங்கை \|சூரி செ: 11<br>கேட்டை (விருச்சிகம்) \|கி.பா: 56 | **7071 \|ந**<br>1987 \| கொழும்புத்துறை \| 157 cm<br>Beautician \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 34 \|செ: 1 |
| **6780 \| வே**<br>1978 \| நீர்வேலி \|152 cm<br>Business \| இலங்கை<br>மூலம் (தனுசு) \|கி.பா: 35\|சூரி செ: 2 | **3319 \| ப**<br>1991 \| சங்கானை \| 161 cm<br>Beautician \| இலங்கை<br>உத்தராடம் (மகரம்) \| கி.பா:58 |

அருந்ததி இணைய திருமண சேவை

www.arunthathee.com

480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27



ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகம் 'கௌரவ சட்டக் கலாநிதிப் பட்டம்' வழங்கியது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள். (விரிவான செய்தி 7ஆம் பக்கத்தில்.)

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற

## கர்ப்பவதிப் பெண் படுகொலை: நேற்று வாக்குமூலங்கள் பதிவு

ஊர்காவற்றுறை, பெப்.15

ஊர்காவற்றுறையில் கர்ப்பவதிப் பெண்ணான ஞா.மேரி றம்சியா படுகொலை வழக்கின் சாட்சிகளிடம் நேற்று வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. நீதிவான் ஏ.எம்.ஏம்.றியால் முன்னிலையில், அவரது பிரத்தியேக அறையில் இது இடம்பெற்றது.

இவ் வழக்கின் முக்கிய சாட்சிகளான வாய்பேச முடியாத சிறுவன் மற்றும் மேரிறம்சியாவின் கணவர் மற்றும் மூவரிடம் நேற்று வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டன. நீதிவான் சாட்சியாளர்களிடம் தனியான விசாரணைகளைமேற்கொண்டார். தொடர்ந்து நீதிமன்றப் பொலிஸார் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தனர்.

மேரிறம்சியாவைக்கொலை செய்தவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும்அன்றையதினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் கடந்த 8 ஆம் திகதிநீதிவான்ஏ.எம். ஏம். றியால் உத்தரவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-07-23)

## பரவிப்பாஞ்சானில் 9 ஏக்கர் காணியையும் நிரந்தரமாகக் கோருகின்றனர் படையினர்

### கரைச்சிப் பிரதேச செயலாளருக்குக் கடிதம்

கிளிநொச்சி பெப்.15

கிளிநொச்சி - பரவிப்பாஞ்சானில் படையினர் ஆக்கிரமித்துள்ள பொதுமக்களின் 9 ஏக்கர் காணியையும் தமது பயன்பாட்டிற்கே வழங்குமாறு படையினர் கரைச்சிப் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கரைச்சி பிரதேசசெயலாளர் பிரிவின் கீழ் உள்ள பரவிப்பாஞ்சான் கிராமத்தின் பெரும் பகுதியை படையினர் ஆக்கிரமித்திருந்தனர். இதற்குள் மக்களின் நிரந்தர உறுதிக் காணிகள்பலவும்அடங்கியிருந்தன. தமது காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் நீண்ட காலமாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் அங்கிருந்த காணிகள்படிப்படியாக விடுவிக்கப்பட்ட நிலையில், தற்போது 27 குடும்பங்களின் காணிகளும் அங்குள்ள பொதுக் கட்டடங்களும் உள்ளடங்கலாக 9 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது.

படையினர் ஆக்கிரமித்துள்ள மேற்படி நிலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ வைப்பகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச்செயலகம் என்பன அமைந்திருந்தன. அந்த 9 ஏக்கர் காணியில் 27 குடும்பங்களுக்குச் சொந்தமான 4.5 ஏக்கர் காணியை உடனடியாக விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மக்கள் நடத்திய போராட்டங்களின்போது அந்த நிலங்கள் விடுவிக்கப்படும் எனவும் அவர்களுக்கு உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையிலேயே இப்போது அந்த 9 ஏக்கர் நிலமும் முழுமையாக படையினரின் பயன்பாட்டிற்குத் தேவையாகவுள்ளது எனவும் அதைத் தங்களுக்கு வழங்குமாறும் படையினரால் பிரதேசசெயலாளருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ம)

## காணாமற்போனோரின் உறவினர்கள் ஏற்பாடுசெய்த போராட்டம் பிசுபிசுப்பு

### போராட்ட விடயம் தொடர்பில் முரண்பாடு

வவுனியா,பெப்.15

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை வவுனியாவில் ஏற்பாடு செய்தபோராட்டம்அவர்களுக்கு இடையேஏற்பட்டகருத்துமுரண்பாட்டால் கைவிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை 8.30மணிக்கு வவுனியா கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்றில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டது. அங்கு அவர்கள் ஒன்றுகூடிய போதும் மதியம் 11 மணிவரை போராட்டம் இடம்பெறவில்லை.

போராட்டத்துக்காக ஒன்று கூடிய ஒரு தரப்பினர் கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும் என கோரிக்கைவிடுத்தனர். ஆனால் மற்றொரு தரப்பினர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் சுமந்திரனுக்கு எதிர்ப்பு வெளியிட வேண்டும் எனக்கோரினர்எனத்தெரியவருகின்றது.

இதனால் இருதரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் போராட்டம் இடம்பெறாமல் அங்கு கூடியவர்கள் கலைந்து சென்றனர்.

(ம-100)

யாழ்.மாட்டின் வீதியில் 2009 ஆம் ஆண்டு

## வீட்டு உரிமையாளரைக் கொலை செய்து முற்றத்தில் புதைத்த வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் உள்ள வீட்டின் உரிமையாளரைக் கொன்று உடலை அந்த வீட்டு முற்றத்தில் புதைத்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணைக்குஎடுக்கப்பட்டுமீண்டும் ஜூன் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜெரோம் என்ற குடும்பஸ்தர் அவருடைய மனைவியுடன் யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் உள்ள வீடொன்றை வாடகைக்குப் பெற்றுக் குடியிருந்தார். அந்தவீட்டின்உரிமையாளரான பெண்ணுடன் அவர் அடிக்கடி தகராறில் ஈடுபட்டுவந்தார்.

2009 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அந்த வீட்டின் உரிமையாளர் காணாமற்போய் விட்டார் என அவரது உறவினர்களுக்கு ஜெரோம் அறிவித்துள்ளார். இதுபற்றிஉறவினர்களால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அவரைமூன்று மாதங்கள் பல இடங்களில் தேடியபோதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில், ஜெரோமுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் குடும்பத்தகராறு ஏற்படவே மனைவி அவரை விட்டுப் பிரிந்து காணாமல் போயிருந்த உரிமையாளரின் உறவினர் வீட்டிற்கு அருகில் குடியமர்ந்துள்ளார்.

வீட்டின் உரிமையாளரான காணாமற்போன பெண்மணியைத்தனது கணவன் கொன்றுவிட்டார் என்றும் அவரது சடலம் அந்த வீட்டு முற்றத்தில் புதைக்கப்பட்டுள்ளது என்றும் உறவினர்களுக்கு அவர் கூறினார். இந்த விடயத்தை உறவினர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரின் கவனத்துக்குக்கொண்டுசென்றனர்.

பொலிஸாருடன் யாழ். நீதவான், சட்ட வைத்திய அதிகாரி போன்றவர்களும்அவ்விடத்துக்குச் சென்றனர். ஜெரோமின் மனைவி சடலம் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டியதை அடுத்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

அதனையடுத்து ஜெரோம் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலையாக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவருக்கு கடந்த வருடம் யாழ். மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது. அந்த வழக்கு நேற்று யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கொல்லப்பட்டவரின் உறவினர்கள், வழக்கை விசாரித்த அப்போதைய யாழ். குற்றத்தடுப்புப் பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் போன்றவர்களின் சாட்சிகள் மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

சந்தேகநபராகிய ஜெரோமின் மனைவி மரணமடைந்துள்ள நிலையில் ஏனைய சாட்சிகளின் வாக்குமூலங்கள் மன்றினால் விசாரிக்கப்பட்டன. அந்தவழக்கு மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ம)

## பொறுப்புக் கூறல் குறித்து ஆஸி. ரணிலிடம் வலியுறுத்த வேண்டும்

### மனித உரிமைக் கண்காணிப்புக் கோரிக்கை


யுத்தம் முடிந்து ஏழு வருடங்களாகி விட்டன. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புக் கூறல் விடயத்தை எவ்வாறு நிறைவு செய்து வழங்கப்போகின்றது என்பதை இலங்கையிடம் ஆஸ்திரேலியா வெளிப்படையாகக்கேட்கவேண்டும்.

தற்போது ஆஸ்திரேலியாவில் உத்தியோகபூர்வ சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம்டேர்ன்புல் இந்த விடயத்தைக் கேட்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சார்பில் அதன் ஆஸ்திரேலிய இயக்குநர் எலனி பியர்ஸன் இக்கோரிக்கையை விடுத்திருக்கின்றார்.

(உ)

## வேகமாக வந்த பிக்கப் மோதி வீதியில் இறந்தன மூன்று மாடுகள்



வேகமாக வந்த 'பிக்கப்' வாகனம் மோதியதில் மூன்று மாடுகளும் அந்த இடத்திலேயே இறந்த சம்பவம் மன்னாரில் இடம்பெற்றது.

மதவாச்சி தலைமன்னார் பிரதான வீதியான, மன்னார் தலை மன்னார் வீதியில், தலை மன்னார் நோக்கிச் சென்ற வட மேல் மாகாணத்தைச் சேர்ந்த 'பிக்கப்' ஒன்று மோதியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாடுகள் வீதியைக் கடந்த சமயம் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மாடுகளுடன் மோதியுள்ளது.

மோதிய மாடுகள் மூன்றும் அதே இடத்தில் வீழ்ந்து இறந்தன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

(ஐ-112)

## மூன்று கோடி ரூபா பெறுமதியான கொகேன் போதைப்பொருள் மீட்பு

சுமார் மூன்று கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய கொகேன்போதைப்பொருளை நாட்டிற்குள் கொண்டுவந்த லித்துவேனியப் பிரஜை ஒருவரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்த பொலிஸார், அவரைத் தேடி வந்த நைஜீரியர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

நைஜீரியர்கள் இருவரும் லித்துவேனியர் கொண்டு வந்த கொகேன் போதைப் பொருளை வாங்குவதற்கு வந்தவர்கள் எனவும் அதன்போதே அவர்களும் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்என்றும் பொலிஸார் கூறினர்.

(ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## உண்மையில் நீதி நிலைநாட்டப்பட்டதா?

தமிழகத்தில் பெரும் அரசியல் எதிர்பார்ப்புகளுக்குக் காரணமாக அமைந்த - வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவித்த - வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிவிட்டது.

தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு கர்நாடக சிறப்பு நீதிமன்றம் வழங்கிய குற்றத் தீர்ப்பை புதுடில்லி உச்சநீதிமன்றம் உறுதி செய்திருக்கின்றது. அந்தக் குற்றத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து, ஏற்கனவே கர்நாடக உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நேற்று புதுடில்லி உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது. நிராகரித்தமை மட்டுமல்ல, கீழ் நீதிமன்றத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசுவாமி வழங்கிய உத்தரவை புதுடில்லி உச்ச நீதிமன்றம் காரசாரமாகச் சாடியுமிருக்கின்றது.

இந்தியாவில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கையில் புதுடில்லி உச்ச நீதிமன்றம் எவ்வளவு உறுதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றது என்பதற்கு, உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு ஓர் எடுத்துக்காட்டு என்றும், குற்றமிழைத்தவர் எந்தப் பதவியில் இருந்தாலும் - எத்தகைய அதிகாரத்தில் இருந்தாலும் - உச்சநீதிமன்றம் அதற்குப் பணியாது நீதியை நிலைநாட்டும் என்பதற்கு இத்தீர்ப்பு உதாரணம் என்றெல்லாம் இந்தியாவில் நீதித் துறையைப் புகழும் நிலைமையை இப்போது அவதானிக்க முடிகின்றது.

ஆனால், சுயாதீனமான - சுதந்திரமான - அவதானி ஒருவருக்கு இந்த நீதித்துறை நடவடிக்கை சரியானது போலத் தோன்றாது என்பதுதான் உண்மை.

"நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமன்றி, நிலை நாட்டப்படுவது போலக் காட்டப்படவும் வேண்டும்." - என்ற நீதித்துறை சார்பான முதுமொழி ஒன்று உண்டு. அது இந்த வழக்கில் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டதா என்பதே கேள்வி.

ஜெயலலிதாவும் அவரின் மற்றைய மூன்று சகாக்களும் சட்டத்துக்கு விரோதமான முறையில் சொத்துச் சேர்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது கர்நாடக விசேட நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கும் ஏனையோருக்கும் தலா நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ஜெயலலிதாவுக்கு நூறு கோடி ரூபா அபராதமும், ஏனைய மூவருக்கும் தலா பத்துக் கோடி ரூபா அபராதமும் விதித்திருந்தது.

இந்தத் தீர்ப்பு மேன்முறையீட்டில் கர்நாடக உயர்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அதற்கு எதிராகப் புதுடில்லி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அதாவது மேன்முறையீட்டுத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு.

புதுடில்லி உச்சநீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து முடித்துத். தீர்ப்பளிப்பது ஒத்திவைக்கப்படுவதாகத் தனது முடிவை அறிவித்து எட்டு, ஒன்பது மாதங்களாகிவிட்டன.

அதாவது, வழக்கு விசாரணையை முடித்துக் கொண்டதாக உச்சநீதிமன்றம் அறிவித்தபோதே வழக்கின் தீர்ப்புக் குறித்து நீதிபதிகள் ஒரு முடிவுக்கு வந்திருப்பர். வந்திருக்க வேண்டும். அந்தத் தீர்ப்பை விரிவாகத் தயாரிப்பதற்குத் தான் கால அவகாசம் தேவை.

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டதன் பின்னரே தமிழக சட்ட சபைத் தேர்தல்கள் நடைபெற்றன. அதன் பின் தான் ஜெயலலிதா பெரு வெற்றியீட்டி ஆட்சி அமைத்தார். அதன் பின்னர்தான் தாம் சாகும்வரை தமிழகத்தின் முடிசூடாத ராணியாக அவர் திகழ்ந்தார்.

அவர் இறந்து இரண்டு மாதங்கள் கழிந்து, அந்த வழக்கின் மற்றொரு குற்றவாளியாக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் சசிகலா, அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராகி, பின்பு முதலமைச்சர் பதவிக்கும் கண்வைத்த பின்னர்தான் உச்சநீதிமன்றம் ஒன்பது மாதங்கள் கழித்து விழித்துக் கொண்டிருக்கின்றது.

உச்சநீதிமன்றம் என்பது பல விடயங்களிலும் சட்ட எல்லைப் பரப்புக்கும் அப்பால் சென்று நீதியை, நியாயத்தை நிலைநாட்டும் அதிகாரமும், தகுதியும், மேன்மையும் கொண்டதாகும்.

வழக்கை விசாரித்து முடித்த போதே - இடையில் ஜெயலலிதா அணியினரை விடுவித்த கர்நாடக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு மிகத் தவறானது என்பது புதுடில்லி உச்சநீதிமன்றத்துக்குத் தெரிந்திருக்கும். இப்போது தனது தீர்ப்பில் முன்னைய நீதிபதி குமாரசுவாமி வழங்கிய விடுதலைத் தீர்ப்பைக் காரசாரமாகச் சாடும் புதுடில்லி உச்சநீதிமன்றம், அந்த முடிவு தனக்குத் தெரிந்திருக்கத் தக்கதாகத்தானே, கடந்த சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிடவும், தனது கட்சியை வெற்றிப்பீடத்தில் அமரவைக்கவும், தொடர்ந்து ஆட்சி செலுத்தவும் பார்த்திருந்தது.....?

இப்போது சசிகலா முதலமைச்சர் பதவிக்குக் குறி வைக்காமல் இருந்திருப்பாரானால்,இந்தத் தீர்ப்பு இப்போதுதன்னும் வெளிவந்திருக்குமா என்ற சந்தேகம் நோக்கர்களிடம் எழுவது நியாயமானதே.

ஆகவே, புதுடில்லி உச்சநீதிமன்றம் இப்போது செய்திருக்கும் நீதி, ஆஹா, ஒஹோ என்று புகழத்தக்கதல்ல. வழக்கு விசாரணை முடிந்த கையோடு காலதாமதமின்றி இந்தத் தீர்ப்பை வழங்கியிருந்தால் அந்தப் புகழ்ச்சி சரியாக இருந்திருக்கும்.

இப்போது, சந்தர்ப்பம் பார்த்து நீதித்துறையும் சேர்ந்து காய் நகர்த்தியதா என்ற ஒரு மயிரிழை சந்தேகம் நோக்கர்களுக்கு எழாமல் இல்லை.




# இஸ்ரேல் உலகப் புகழ் கட்டடக் கலைஞர் இலங்கை வருகின்றமைக்கு கடும் எதிர்ப்பு

### முஸ்லிம் முற்போக்கு முன்னணி கண்டன அறிக்கை

இலங்கையின் பல நவீன கட்டடங்களை உருவாக்குவதற்கு இஸ்ரேலின் உலகப் புகழ் கட்டடக் கலைஞர் என்ற ரீதியில் மோசே இனத்தவர்கள் இலங்கை வருகின்றமையை முஸ்லிம் முற்போக்கு முன்னணி கடுமையாக எதிர்க்கிறது. என்று முன்னாள் சிரேஷ்ட அமைச்சரும், முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபருமான ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பலஸ்தீனத்தில், கிழக்கு பலஸ்தீனத்திலும் மஸ்ஜிதுல் அக்ஸா பிரதேசத்திலும் பல புதிய குடியிருப்புக்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பவர் இவர்களே.

அவர்கள் ஏன் இலங்கைக்கு வரவேண்டும்? இலங்கையில் நல்ல கட்டட நிபுணர்கள், கட்டடக்கலைஞர்கள் இல்லையா?

இவர்களுடைய வருகையில் இரகசியம் நிறைந்துள்ளது. அவர்களுடைய இலங்கை வருகை இந்த நாட்டு அரசின் பலஸ்தீன் சார்பான கொள்கைகளை திசை மாறச் செய்யும் நடவடிக்கையின் ஓர் உச்சக் கட்டமாக அமைகின்றது.

இந்த நாட்டை அமெரிக்கா, நோர்வே ஆகியவற்றுக்குச் சியோனிச வாதிகள் மூலம் தாரை வார்த்துக் கொடுப்பதற்கு இந்த அரசும் குறிப்பாக வெளிநாட்டு அமைச்சும் மறைமுகமாக எடுத்து வரும் நடவடிக்கை இப்போது வெட்டவெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அவர்கள் இலங்கை வருவதன் மூலமாக இலங்கைக்குப் பல தீமைகள் ஏற்படும். குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக்கு எதிர்காலத்தில் பெரும் தீங்கு விளைய இருப்பது முன்னறிவித்தலாக இந்த நிபுணருடைய வருகை அமைகின்றது.

சியோனிச வாதத்தை இந்த நாட்டிலே நிலை நிறுத்துவதற்காக வேண்டி எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு முத்தாய்ப்பு வைக்கின்ற செயலாக இது அமைகின்றது.

ஒரு பக்கத்தில் வட மத்திய மாகாணத்திலே விவசாயங்களுக்கென இஸ்ரேலியர்களுக்குக் காணிகள் வழங்கப்படுகின்றன. கொழும்பை நடுமையகமாகக் கொண்டு இஸ்ரேலியர்களால் ஒரு பெரும் செய்மதி உருவாக்கப்படுகின்றது. இது எதைக் காட்டுகின்றது. இந்த விடயங்களைச் செய்வது யார்? ஜனாதிபதியினுடைய அரசா? அல்லது ரணிலின் அரசா?

இந்த நாட்டு மக்கள் 98 சதவீதமான முறையில் வாக்களித்து பதவிக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி மிகவும் நுணுக்கமான அவதானத்தை இதன் மீது செலுத்த வேண்டும்.

அது மட்டுமல்ல, முஸ்லிம் அமைச்சர்களும், அரசிலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதனைக் கவனத்தில் கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள புகழ் பெற்ற கட்டடக் கலைஞர்களுக்குப் பணிகளை வழங்குவதற்கு நடை முறைச் சாத்தியமான நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றுள்ளது. (ஐ)

# போதை மாத்திரை விற்பவர்களை பொலிஸாருக்கு நிச்சயம் தெரியும்

### குற்றஞ்சாட்டுகிறார் முஜீபுர் றஹ்மான் எம்.பி.

கொழும்பு, பெப்.15

கொழும்பு நகரில் அதிகமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த போதை மாத்திரைகளை விற்பனை செய்பவர்கள் யாரென்று பொலிஸாருக்குத் தெரியும். ஆனால் பொலிஸார் இதுவரை எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றனர்.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் றஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற கொழும்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பொலிஸ் உயரதிகாரிகள் முன்னிலையில் முஜீபுர் றஹ்மான் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொழும்பு வாழைத்தோட்டப் பகுதியில் அதிகமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. பொலிஸார் தெரிந்தும் தெரியாதது போல் இருக்கின்றனர்.

கொழும்பு மத்திய வீதிப் பகுதியில் கடந்த வாரம் 25 வயது இளைஞர் ஒருவர் இந்த போதை மாத்திரையை பாவித்தமையின் மூலம் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் கூட இந்தப் பிரதேசத்தில் போதை மாத்திரை விற்பனை குறைந்ததாக இல்லை.- என்றார்.

இங்கு உரையாற்றிய நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க, கொழும்பு நகரில் போதை மாத்திரை விற்பனையை இல்லாதொழிக்க பொலிஸார் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ஒரு வார காலத்துக்குள் பொலிஸார் இது தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். (ஐ)

### நாளை

16.02.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம்: சித்திரை பி.ப 3.02 வரை
திதி: பஞ்சமி மு.ப 8.49 வரை
சுபநேரம் : 8.05 – 9.33 வரை
இராகுகாலம் : 2.03 – 3.33 வரை

# காணாமற் போனோரைக் கண்டுபிடிக்க உருவானதல்ல தகவல் அறியும் சட்டம்

## தேசிய ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் கூறுகிறார்

கொழும்பு, பெப்.15
தகவல் அறியும் சட்டம் காணாமற்போனோரை கண்டுபிடித்து தருமாறு வலியுறுத்துவதற்கான ஒன்றல்ல. தகவல் அறியும் சட்டம் என்பது தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான ஒன்றே.

தேசிய ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி ஜகத் லியனாரச்சி இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசதகவல்திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தகவல் அறியும் சட்டம் தொடர்பில் வளவாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் செயலமர்வில் இந்த விடயத்தைசட்டத்தரணி ஜகத் லியனாராச்சி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தகவல் அறியும் சட்டம்நடைமுறைக்கு வந்த பின்னர்பெரும்எண்ணிக்கையிலானோர் காணாமல் போன பலர் தமது உறவுகளை கண்டுபிடித்துத் தருமாறு விண்ணப்பங்களைச்சமர்ப்பித்திருக்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரங்க கலான் சூரிய குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் சட்டத்தின்மூலம்காணாமல் போனோரைக் கண்டுபிடித்துத் தருமாறு கோர முடியாது. தகவல் அறியும் சட்டம் என்ன என்பதைப் பொதுமக்கள்சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் காணாமற்போயிருப்பாராயின் அவர் எந்த பொலிஸ் நிலையத்தால் அல்லது பாதுகாப்பு பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டார்என்பது தொடர்பான தகவல்களையே இந்தச் சட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.



காணாமற்போனோரைக்கண்டுபிடிப்பதற்கு இதன் மூலம் முடியாது. பதிவுகள் தொடர்பான தகவல்களையே பெற்றுக்கொள்ள முடியும். ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கே தகவல் அறியும் சட்டம் பெரிதும் உதவும்.- என்றார். (ஐ)

# காலம் தாழ்த்தாது உள்ளூராட்சித் தேர்தலை விரைந்து நடத்த அரசு முன்வர வேண்டும்

## முல்லைத்தீவை நகர சபையாகத் தரம் உயர்த்துக!!

## பொது ஊழியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு,பெப்.15
''உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலைகளை அரசு இன்னும் காலதாமதப் படுத்தாது விரைந்து நடத்துவதற்கு முன்வர வேண்டும். இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகளின் கைகளில் உள்ளூராட்சி மன்றங்களின் சிறந்த நிர்வாகம் வரவேண்டும்''

-இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ். சற்குணராசாவின் ஏற்பாட்டிலும், சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையிலும் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் சங்கத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஏ.எல்.எம்.சலீம், புதுக்குடியிருப்பு பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் எஸ்.சிவந்தினி, முகாமைத்துவ உதவியாளர் சிவா ஜெயந்தன் ஜீவினி, சங்க வன்னி மாவட்ட இணைப்பாளர் கே.புண்ணியமூர்த்தி, சங்க மாவட்ட செயலாளர் வே.விஜயராசா, புதுக்குடியிருப்பு பிரதேச இணைப்பாளர் ச.அரியராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பின்வரும் பொதுத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

★ கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு மக்களின் காணிகளை உடனடியாக விடுவித்து மக்களிடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

★ முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில் புரிவோர் தமது தொழிலை முடித்துக் கொண்டு கரை திரும்பும் போது துறைகள் தெரியாது பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். எனவே, அந்தத் துறைசார்ந்த கரையோரங்களில் வெளிச்ச வீடுகள் அமைக்கப்பட வேண்டும்.

★ முல்லைத்தீவு பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்த வேண்டும்.

★ ஒட்டுசுட்டானுக்குத் தனிப்பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும்.

★ உள்ளூராட்சி மன்றங்களில் (வடக்கில்) கடமை புரியும் ஊழியர்களின் பிரச்சினைகள் களையப்பட்டு உடனுக்குடன் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

★ தொழில் சார்ந்த விடயங்களில், இச்சபைகளில் பதில் கடமை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும். (இ-150)

# எதிர்வரும் காலங்களில் வறட்சி நிலவும் ஆபத்து

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, பெப்.15
பெரும்பாலான பிரதேசங்களில் எதிர்வரும் மாதங்களில் கடும் வறட்சி காலநிலை நிலவக்கூடிய ஆபத்து உள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அனுராதபுரம், கிளிநொச்சி, கம்பஹா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், குருநாகல், மொனராகல, முல்லைத்தீவு, புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை, கண்டி, வவுனியா, கேகாலை உள்ளிட்ட 14 மாவட்டங்களில் வறட்சி நிவாரண சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் சுமார் 5 லட்சம் பேர் குடி தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், அவர்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தைத் தொடர்ந்து நடத்த மேலதிக நீர்த் தாங்கிகள், பௌஸர்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வறட்சியால் தற்போது பயிர்ச்சேதம், காட்டுத் தீ போன்ற பிரச்சினைகளும் உருவாகியுள்ளன.

இவ்வாறானதொரு நெருக்கடியை எதிர்கொள்ள அனர்த்த முகாமைத்துவ அமைச்சும், ஏனைய சம்பந்தப்பட்ட பிரிவுகளும் பலமுன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன என்று அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.




# உள்ளூராட்சித் தேர்தல் தாமதம்; மக்கள் கிளர்ச்சியை ஏற்படுத்தும்!

## வாசுதேவ நாணயக்கார எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, பெப்.15
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த அரசு தொடர்ந்தும் காலம் தாழ்த்தினால் மக்கள் கிளர்ச்சியை அது எதிர்நோக்க நேரிடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பொரளை என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் கூட்டு எதிர்க்கட்சி செயற்படும். கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமன்றி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஆதரவாகச் செயற்படும் ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொண்டு போராட்டம் நடத்தப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எப்போது நடத்த முடியும் என்று அறிவித்து நியாயமான ஒரு கால எல்லைக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் சர்வஜன வாக்குரிமைக்காகப் பெரிய மக்கள் எழுச்சிப் போராட்டம் வெடிக்கும்.

மக்கள் எதிர்ப்புக்களைக் கட்டுப்படுத்த அரசு புதிய சட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.- என்றார். (ஐ)

# ஓட்டமாவடியில் விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

## நெல்லை உத்தரவாத விலைக்குக் கொள்வனவு செய்ய வலியுறுத்தி

மட்டக்களப்பு ஓட்டமாவடி விவசாய எல்லைக்குட்பட்ட விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில் அரசாங்கம் நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய வேண்டும் என வலியுறுத்தி விவசாயிகள் நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில்20 இற்கும் மேற்பட்ட விவசாய அமைப்புக்கள் கலந்து கொண்டன இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகம் வரை உழவு இயந்திரத்தில் நெல் மூடைகளை ஏற்றியவாறு பேரணியாக விவசாயிகள் சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்:-






எமது பிரதேசத்தில் தற்போது பெரும்போக அறுவடை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சிரமத்தின் மத்தியில் அறுவடை செய்யும் நெல்லைத் தனியார் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யும் நிலை காணப்படுகிறது. அரசு நிர்ணயித்த உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதன் மூலம் நாங்கள் இலாபமடைய முடியும்.

அதேபோன்று தனியாரும் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யவேண்டும்.-என்றனர்.

இதன்போது பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபரிடம் விவசாயிகளின் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

'ஏழை விவசாயிகளின் வயிற்றில் குளிர்காய நினைக்காதீர்கள்', 'வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குங்கள்','ஏழை விவசாயிகளின் விளை பொருள்களுக்கு போதிய விலைகொடுங்கள்', 'விவசாயிகள் நல்லாட்சியில் வாழ்வதா? அல்லது செத்து மடிவதா?', 'விவசாயிகளை ஏமாற்றாதே' போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ச)

## அம்பாறையில் மினி சூறாவளி!





அம்பாறை சாய்ந்தமருது கரையோரப் பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை மினி சூறாவளி ஏற்பட்டது.

அந்தப் பகுதியில் ஹசனாத் பள்ளிவாசலில் அமைந்துள்ள குர் ஆன் மதரஸா கூரை, வீடுகள் மற்றும் வாடிகள், தோணிகள் என்பன சேதமடைந்துள்ளன. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில், பிரதேச அதிகாரிகள் அப்பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளனர். (ச)

# சிறுபான்மைச் சமூகங்கள் இணைந்து செயற்பட்டால் அரசமைப்பில் ஆகக்கூடிய அதிகாரங்களை பெறலாம்

## கிழக்கு முதலமைச்சர் நம்பிக்கை

மட்டக்களப்பு,பெப்.15

புதிய அரசமைப்பில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டும். சிறுபான்மைச் சமூகங்கள் மனப்பூர்வமாக இணைந்தால், அதிகாரப் பகிர்வில் அரசிடமிருந்து ஆகக் கூடிய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஏறாவூரில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற செயற்றிட்டங்களின் அமுலாக்கம் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்கள் உறவு தொடர்ச்சியாக வலுப்படுத்தப்பட்டு, ஒரு தீர்க்கமான உடன்பாடு எட்டப்பட வேண்டும் என்பதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் உறுதியாக உள்ளனர். அதற்கான முன்னெடுப்புக்கள் ஏற்கெனவே தொடங்கி விட்டன.

இரு சமூகங்களினதும் கௌரவம் பாதிக்கப்படாத வகையில் பரஸ்பர புரிந்துணர்வும், உடன்பாடும் தேவை. இன்னமும் பிளவுபட்ட சமூகங்களாக நாம் இருப்பது இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகங்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அதனால் இணக்கப்பாடு என்பது காலத்தின் தேவையாகவுள்ளது. நீடித்து நிலைத்து நிற்கும் சமாதானமும் சகவாழ்வும் நமது இவ்விரு சமூகங்களினதும் தியாகங்களில் தங்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார் (ச)

## முதலமைச்சர் அலுவலகத்தில் தீ!

கிழக்கு மாகாண முதலமைச்சர் அலுவலக நிர்வாகப் பிரிவில் ஏசி மெசினில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை தீப்பற்றியுள்ளது என முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

வழமைபோன்று காரியாலய வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது நிர்வாகப் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த ஏசியில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டது. இதில் 100 இற்கும் மேற்பட்ட ஆவணங்கள், ஆவணங்கள் சேகரித்து வைத்திருந்த அலுமாரி மற்றும் ஜன்னல்கள் என்பன தீக்கிரையாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.





## கரடி தாக்குதலுக்குள்ளாகி இருவர் ஆஸ்பத்திரியில்!

திருகோணமலை - அடம்பன காட்டுப் பகுதியில் விறகு எடுக்கச் சென்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர், கரடித் தாக்குதலுக்கு இலக்காகி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கோமரங்கடவெல- அடம்பன பகுதியைச் சேர்ந்த ஜி.சுஜித்குமார (வயது-34), சீ.எச்.சனத் குமார (வயது-36) என்பவர்களே தாக்குதலுக்குள்ளானவர்கள் ஆவர்.

வீட்டுக்குப் பின்னாலுள்ள காட்டுக்குள் விறகு சேகரிக்கச் சென்ற போதே, இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

கல்முனைப் பிரதேசத்தில் சில பாடசாலை மாணவர்கள் 'மாவா' எனப்படும் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர். சில தீய நபர்கள், மாணவர்களை இலக்கு வைத்து இதனை விற்றுத் தமது துஷ்பிரயோக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துகின்றனர். இதற்கு அடிமையாகின்ற மாணவர்கள் தொடர்ந்தும் அவற்றை காசு கொடுத்து வாங்கி நுகர்கின்றனர். மாணவிகளும் கூட இந்தப் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் சிலர் 'மாவா' எனப்படும் போதைப் பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர்.



இது எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.ரயீஸ் தெரிவித்தார்.

தேசிய ஆரோக்கிய வாரத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபையில் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களின் உரிமையாளர்களுக்கு உணவுப் பாதுகாப்பு தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட அறிவுறுத்தல் கூட்டத்தில் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விலை குறைந்த சட்ட விரோத சிகரெட் மூலமே இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் புகைத்தல் பழக்கத்திற்கு அடிமையாகின்றனர். ஹோட்டல்களில் சிகரெட் புகைப்பதை முற்றாகத் தடை செய்ய வேண்டும். ஹோட்டல்களில் யாராவது சிகரெட் புகைப்பது கண்டு பிடிக்கப்பட்டால் ஹோட்டல் உரிமையாளர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ச)

## மட்டக்களப்பில் 40 நாள்களில் 442 பேருக்கு டெங்கு


மட்டு.மாவட்டத்தில் கடந்த 40 நாள்களில் 442 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்புத் தொடர்பில் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையால் . கடந்த வாரம் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது 752 வீடுகள் சோதனையிடப்பட்டன. டெங்கு நுளம்புக் குடம்பிகள் உள்ளன என இனங் காணப்பட்ட 20 வீட்டு உரிமையாளர்கள் மீது இந்தச் சோதனையின் போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ச)

# இலங்கை மீதான தீர்மானம்; இம்முறை பிரிட்டனே முன்வைக்கிறது!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை இம்முறை பிரிட்டன் முன்வைக்கவுள்ளது என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடருக்கான ஒழுங்கமைப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜெனீவாவில் இடம்பெற்ற போதே இந்தத் தகவல் பேரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கைக்குக் காலஅவகாசத்தை அளிக்கும் வகையில், இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.


இந்தத் தீர்மானம் பேரவையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் உரையாற்றவுள்ளார்.

எனினும், எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 22 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான விவாதம், மார்ச் மாதம் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னர், இலங்கை தொடர்பான தீர்மானங்களை அமெரிக்காவே முன்வைத்து வந்தது. எனினும், அமெரிக்காவில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் தெளிவான நிலைப்பாடுகள் எடுக்கப்படாத நிலையில், இம்முறை இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## இலங்கையருக்கான அமெரிக்க விசா; கொள்கையில் மாற்றம் ஏதுமில்லை

### கொள்ளுப்பிட்டி தூதரகத்தில் புதிய கட்டுப்பாடுகள்



கொழும்பு,பெப்.15

இலங்கையர்களுக்கான அமெரிக்காவின் விசா கொள்கையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையர்கள் அமெரிக்காவுக்கு விசா இன்றிப் பயணிக்கலாம் என்று பரவிய வதந்திகளை அடுத்தே, அமெரிக்க தூதரகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம் என்ற கொள்கையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கையெழுத்திட்டுள்ளார் என்றும், இலங்கையர்கள் விசா இல்லாமல் அமெரிக்காவுக்குப் பயணம் செய்ய அனுமதிக்குமாறு நிறைவேற்று அதிகார ஆணையை அவர் வழங்கியுள்ளார் என்றும் இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரக அலுவலகத்தின் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகள் கடுமையாக விதிக்கப்படவுள்ளன என்றும் அந்தத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க விசாவுக்கான நேர்முகத் தேர்வுக்காக வருபவர்கள் அந்த சட்ட நெறிகளை ஆய்வு செய்து அதற்கமைய வருகை தருமாறு தூததரகம் அறிவித்துள்ளது.

அந்தச் சட்டத்தை மீறும் நபர்கள் உள்ளே செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைப்பேசி, டிஜிட்டல் நாள்குறிப்பு, டிஜிட்டல் கடிகாரங்கள், கமரா, ஓடியோ / வீடியோ கசெட்டுகள், இறுவட்டு, எம்பீ3 இயந்திரங்கள், மடிக்கணினிகள், மின்னணு அல்லது பற்றரிகள் கொண்ட பொருள்களுடன் ஒருவரும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை என தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும், உணவு மற்றும் குடிதண்ணீர், வாசனைத் திரவியங்கள், சீல் வைக்கப்பட்ட கடித உறைகள், தீயை ஏற்படுத்தும் சிறிய பொருள்கள், கத்தரிக்கோல் ஆகியவற்றை உள்ளே கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூர் பறந்தார் மஹிந்த!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவசரமாக நேற்று முன்தினம் சிங்கப்பூர் பயணமாகியுள்ளார்.

வைத்திய பரிசோதனைக்காகவே அவர் சிங்கப்பூர் நோக்கி பயணமானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கப்பூர் மவுன்ட் எலிசபெத் வைத்தியசாலையில் அவருக்கு வைத்திய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் உதித லொக்குபண்டார மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் கடைசி மகன் ரோஹித ராஜபக்ஷ உட்பட குழுவினர் சிங்கப்பூர் நோக்கிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எந்தப் பாதிப்புகளும் ஏற்படமாட்டா!

### பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வா கூறுகிறார்

கொழும்பு,பெப்.15

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எந்தப் பாதிப்புகளும் ஏற்படமாட்டா என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 34ஆம் அமர்வு நடைபெறவுள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சில அமர்வுகளின் போது இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றுதல், மனித உரிமை நிலைமைகள் குறித்து விவாதம் செய்தல் போன்ற விடயங்கள் நடைபெற்றாலும், இம்முறை அவ்வாறான எந்தவொரு விடயங்களும் நடைபெறா.

2015 ஆம் ஆண்டில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எவ்வாறு அமுல்படுத்தப்படுகின்றது அதன் முன்னேற்றம் எவ்வாறு அமைந்துள்ளது என்பவை தொடர்பான அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்த அறிக்கை, எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்த அமர்வில் உரையாற்ற உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பாக வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது. அதனையே ஜெனிவாவில் கோரவிருக்கிறோம் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஏற்கனவே தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## ரக்னா லங்கா நிறுவனத்தின் புதிய தலைவர் நியமனம்

ரக்னா லங்கா நிறுவனத்தின் புதிய தலைவராக நாலக கலுவெல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றி வரும் பீ.ஆர்.ராஜபக்ஷ, ரக்னா லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட ரக்னா லங்கா நிறுவனம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் ரணிலுக்கு கலாநிதிப் பட்டம்; ஆஸி.பல்கலைக்கழகம் வழங்குகிறது!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, ஆஸ்திரேலிப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கான நான்கு நாள் பயணத்தை மேற்கொண்ட பிரதமர், நேற்று முன்தினம் இரவு ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரை சென்றடைந்தார்.

அவரை, விக்டோரியா மாநில பிரதமர் டானியல் அன்ட்ரூ, இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் பிறைஸ் ஹட்சிசன் ஆகியோர் மெல்போர்ண் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றுள்ளனர்.

இந்த நிலையில், டீலோங்கில் உள்ள டீக்கின் பல்கலைக்கழகம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கௌரவ சட்ட கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

வன்முறை, முரண்பாடுகளில் இருந்து நிலையான ஜனநாயகத்தை நோக்கி இலங்கையைக் கொண்டு செல்லும், இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளைக் கௌரவிக்கும் வகையிலேயே கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்படவுள்ளது.



அதேவேளை நேற்றுப் பிற்பகல் கன்பரா சென்ற, ரணில் விக்கிரமசிங்கவை ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல் வரவேற்றுள்ளார். இதன் பின்னர் இரு நாடுகளின் தலைவர்களுக்கும் இடையில் இருதரப்புப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 60 ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும், முதல் இலங்கைப் பிரதமர், ரணில் விக்கிரமசிங்கவே என்பது குறிப்பிடத்தக்கது.

# மகாவலி வலயத்தை வறட்சி தாக்கவில்லை

## விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தகவல்

வறட்சிக் கால நிலை காரணமாக பயிர் நிலங்களுக்குப் பெரியளவில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் மகாவலி வலயத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்ட பயிர்ச் செய்கைக்கு இதனால் பாதிப்பும் ஏற்படவில்லை.

பெரும்போகத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பயிர் நிலங்களில் இந்த முறை 4 லட்சத்து 91 ஆயிரம் ஹெக்டேயர் நிலப் பரப்பில் மாத்திரமே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் பட்டது என்று விவசாயத் திணைக்களத் தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரொஹான் விஜேகோன் தெரிவித்துள்ளார்.

8 லட்சம் ஹெக்டேயருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள எதிர்பார்க் கப்பட்டிருந்தது.

அதேபோல், பெரும் போகத்தில் 13 லட்சம் மெற்றிக் தொன் நெல் அறுவடை எதிர்பார்க்கப் பட்டது. வறட்சிக் கால நிலை இல்லாமல் இருந்திருந்தால் 17 லட்சம் மெற்றிக் தொன் நெல்லை அறுவடை செய்திருக் கலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தினசரி ராசி பலன் 15.02.2017

துர்முகிவருடம் 2017ஆம் ஆண்டு மாசித்திங்கள் 3ஆம் நாள் பஞ்சமி முழுவதும். அத்தம் பகல் 11.32 வரை. பின் சித்திரை. சித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 12.24 முதல் 1.53 வரை. சுபநேரம்: மாலை 4.59 முதல் 6.29 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: மாசி மாததேய்பிறை பஞ்சமி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று நன்மையான நாள். முயற்சிக்கும் காரியங்கள் அனுகூலமாகும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் அவசர தேவைகள் நிறைவேறும்.

**ரிஷபம்:** மேன்மையான நாள். செய்தொழில் வியாபாரம் வேகமும், முன்னேற்றமுமாக அமையும். வெளியூர்ப் பயணம் மூலம் வெற்றியும், லாபமும் கிட்டும்.

**மிதுனம்:** குழப்பமான நாள். மனதில் சஞ்சலம் குடி கொள்ளும். நினைத்தவை நிறைவேறாமற் போகும். குடும்பப் பிரச்சினைகள் விஸ்வரூபமெடுக்கும். சிறு விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

**கடகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. முயற்சிக்கும் காரியங்கள் தடை, தடங்கல்கள் உண்டாகும். கடன் தொல்லை அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** யோசனையான நாள். செய்தொழிலில் அபிவிருத்தி உண்டாகும். வெளிவட்டாரப் பழக்கம் பிரகாசமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும், மனதில் உற்சாகமும் பிறக்கும்.

**கன்னி:** இனிமையான நாள். உத்தியோகத்தில் உயர்வு, குடும்பத்தில் வளம் செழிப்பும், சந்தோஷமும் நிறைந்திருக்கும். பெரிய மனிதர்களின் அனுகூலங்களும், ஆதாயங்களும் கிட்டும்.

**துலாம்:** துயரமான நாள். சிலர் வழக்குகளால் அலைய நேரும். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களில் மதிப்பு, மரியாதை கெடும். சொத்து சம்பந்தமான பிரச்சினை உருவாகும்.

**விருச்சிகம்:** சுபீட்சமான நாள். முயற்சிக்கும் காரியங்கள் எங்கும், எதிலும் வெற்றியைத் தரும். உத்தியோகத்தில் உயர்வு, சந்தோஷமும் நிறைந்திருக்கும். புதிய நட்பு, புதிய உற்சாகம் உண்டாகும்.

**தனுசு:** விருத்தியான நாள். சுபகாரியங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பெறுவார்கள். பூர்வீக சொத்திலிருந்து ஆதாயம் வரும்.

**மகரம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தில் இழந்த இடத்தைத் திரும்பப் பெறுவார்கள். பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும்.

**கும்பம்:** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோகம் சம்பந்தமாக நிறைய அலைய வேண்டிவரும். சிலர் வேலைதேடி அலைவார்கள்.

**மீனம்:** விருத்தியான நாள். செய்தொழில் வியாபாரத்தில் முன்னணியில் திகழ்வார்கள். பொருளாதாரம் ஏற்றமடையும். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு கணிசமாக உயரும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந்நாளில் சுபகருமங்களைத் தவிர்க்குக.

# எல்லா விடயங்களிலும் முந்தும் சிறுபான்மை; தடுக்க முடியாத நிலையில் அரசியல்வாதிகள்!

## துவேசம் கக்குகிறார் ஜனசெத தலைவர் சீலரத்ன தேரர்



பெரும்பான்மையினரான சிங்கள மக்களை எல்லா விடயங்களிலும் முந்திக் கொண்டு சிறுபான்மை இனத்தவர்கள் தற்போது பெரும்பான்மையாக மாறிக்கொண்டு வருகின்றனர். இதனைத் தடுக்க முடியாமல் அரசியல்வாதிகள் முட்டாள்களாக மாறிவிட்டனர்.

- இவ்வாறு ஜனசெத முன்னணியின் தலைவரான பத்தரமுல்லே சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு விஜயம் செய்த அவர், நகரிலுள்ள பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்களைத் தெளிவூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டார். பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியிலும் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசியல்வாதிகளால் நாட்டுக்கு என்ன நல்லது நடந்தது? அரசுக்கு திடமான கொள்கையொன்று இல்லை. அவ்வாறான கொள்கை ஒன்று இன்னும் வகுக்கப்படவில்லை. அதனை உருவாக்குவதற்குக் கூட சிறந்த மூளை அரசுக்கு இல்லை. அவர்களது மூளை சலவை செய்யப்பட்டுள்ளது.

இப்போது புதிய அரசமைப்புப் பற்றிப் பேசுகின்றனர். தற்போது இருக்கும் அரசமைப்பு போதாதா? புதிய சமஷ்டி அரசமைப்பால் இந்த நாட்டைத் துண்டு துண்டுகளாகப் பிரிக்க முயற்சிக்கின்றனர். கொள்கை யையும், நாட்டையும் பாதுகாக்க வேண்டும். ஆனால் புதிய அரசமைப்பைக் கொண்டு வரவேண்டும். புதிய அரசமைப்பால் பௌத்த சாசனத்துக்குப் பாதிப்பு ஏற்படும். அதனைப் பாதுகாக்கச் சென்ற தலைவர்களுக்குத் தமது மதத்தின் தர்மத்தையும் இனத்தவர்களையும் பாதுகாக்க முடியாது போய்விட்டது.

### நாடு துண்டாடப்படும்

இந்த நிலையில், புதிய அரசமைப்பு கொண்டுவரப்பட்டால் நாடு துண்டாடப்பட்டு அழிந்து விடும். சிறுபான்மை இனத்தவர்கள் தங்களது இனத்தவர்களுக் காகப் போராடி வெற்றியைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், பெரும்பான்மையினர் இன்று சிறுபான்மையினராக மாறியுள்ளனர். எம் இனத்தவர்களுக்குச் சிறிய வேலை ஒன்றாகிலும் செய்து கொள்ள முடியாமலிருக்கிறது. எல்லா சந்தர்ப்பங்களிலும் எம்மினத்தவர்கள் விழுகின்றனர். தொழில்வாய்ப்பு இல்லை, குறைந்த பட்சம் கடை ஒன்றை நாம் ஆரம்பித்தால் அதனை நகரசபை அல்லது பிரதேச சபையிலிருந்து வந்து சட்டவிதி முறைகளுக்கு முரணானது என்று கூறி உடைத்து விடுகின்றனர்.

ஆனால் ஏனைய இனத்தவர்களுக்கு அரசாங்கமே கடைகளை அமைத்துக் கொடுக்கிறது; காணிகளை பெற்றுக்கொடுக்கிறது, வீடுகளையும் அமைத்துக் கொடுக்கிறது. எமது இனத்தவர்களுக்கு ஒன்றுமில்லை இதை யாரிடம் முறையிடுவது? எனவே தயவு செய்து மக்களிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்கின்றேன். பொறுத்தது போதும். மகாநாயக்கர்கள் விழித்தெழுந்து செயற்பட வேண்டும். நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பும் நாள் நெருங்கிவிட்டது.- என்றார். (ஐ)

# வட பிராந்திய கடற்படையின் மருத்துவ முகாம் காரைநகரில்!



கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக நலத்திட்டங்களின் ஒரு பகுதியாக வட பிராந்திய கடற்படை தலைமையகத்தால் நடமாடும் மருத்துவ முகாமொன்று காரை நகரில் முன்னெடுக் கப்பட்டது.

இந்த மருத்துவ முகாம், யாழ். போதனா வைத்திய சாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் மையங்களுடன் இணைந்து பிரதேச வைத்திய சாலையில் அண்மையில் இடம் பெற்றது என்று கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குழந்தை மருத்துவம், மகப்பேற்றியல் பெண்நோயியல், பொது அறுவை சிகிச்சை, காது மூக்கு தொண்டை, கண் மருத்துவம், பொது மருத்துவம், நரம்பியல் மற்றும் அகஞ்சுரப்பு தொகுதி ஆகிய மருத்துவ துறைகளைச் சேர்ந்த விஷேட வைத்திய நிபுணர்கள் குழுவினர் முகாமில் பங்கு கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 500 இற்கும் அதிகமான நோயாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



கொழும்பில் அமைந்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் கடற்படை பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கொமாண்டர் பிரியன் பேஜ் மற்றும் பாதுகாப்புத் திணைக்களத்தின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான நிபுணர் ஜோன் ஹில்ஸ் ஆகியோர் முல்லைத்தீவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்துக்கு அண்மையில் விஜயத்தை மேற்கொண்ட இவர்களை, முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யு பீ.டீ.பீ பெர்னாண்டோ வரவேற்றார். (ஐ)

# தென்மராட்சி வலய அதிபர்கள் கூட்டம்

சாவகச்சேரி, பெப்.15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 'ஜீ.ஐ.ஸற்' நிறுவனத்தால் மேற்கொள்ளப் பட உள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நிறுவனப் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாட்வுள்ளமையால் வலயத்தின் 1 ஏபி வகை, 1 சி வகை 2 ஆகிய பாடசாலைகளின் அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கேட்டுள்ளார்.

இதேவேளை, இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைகளின் அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டமும் நடைபெறும்.

# தீர்வுகள் கிட்டாத நிலையில் தொடரும் மக்கள் போராட்டம்

செல்வரட்ணம் சிறிதரன்

நல்லாட்சிக்கான அரசு என்னும் தேசிய அரசு என்றும் சிறப்பாகக் குறிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் இலங்கை சுதந்திரக் கட்சிகள் இணைந்த கூட்டு அரசின் மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை சிதைந்து கொண்டிருக் கின்றது. அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் படிப்படியாகக் குறைந்து செல்வது கவலைக்குரிய விடயமாகும்.

நல்லாட்சி அரசு தேசிய நல்லிணக்கத்துக்கும், ஐக்கியத்துக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது, குறிப்பாகத் தேசிய நல்லிணக்கத்துக்காக அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறப்பட்டது.

ஆனால், தேசிய நல்லிணக்கத்துக்குப் பதிலாகப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்வதையே காண முடிகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் தலைமையாகிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கிச் செயற்பட்டு வருகின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்த அரசு நிச்சயமாகத் தீர்த்து வைக்கும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் முழுமையாக நம்பியிருக்கிறார்கள். அரசின் மீது நம்பிக்கை வைத்து, அதற்குரிய ஆதரவை வழங்க வேண்டும் என்று அந்தத் தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் வலியுறுத்தி வருகின்றார்கள்.

முன்னைய ஆட்சியைப் போலல்லாமல், புதிய ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருக்கின்றன என்று அந்தத் தமிழ்த் தலைவர்கள் கூறி வருகின்றனர்.

புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பில் இனப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அது தொடர்பாகப் பல சுற்று பேச்சுகள் நடத்தப்பட்டிருக்கின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரன் ஆகியோர் கூறுகின்றார்கள்.

> வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் அரசு தொடர்ந்து அமைதி காக்க முடியாது.

கழிந்துபோன 2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்படும் என்று சம்பந்தன் மிகுந்த நம்பிக்கையோடு தெரிவித்திருந்தார்.

ஆனால், 2016 ஆம் ஆண்டு அமைதியாகக் கழிந்து போனதே தவிர எதிர்பார்க்கப்பட்ட அரசியல் தீர்வு கிடைக்கவில்லை.

அரசியல் தீர்வு கிடைத்துவிடும் என்று அடித்துக் கூறிய அல்லது அதீத நம்பிக்கை கொண்டிருந்த சம்பந்தன், இந்தப் புதிய ஆண்டில் தீர்வு கிடைக்கும் என்று கூறியிருக்கின்றார்.

இனப் பிரச்சினை போன்ற சிக்கல்கள் பல நிறைந்த - புரையோடிப் போயுள்ள- ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இலகுவான காரியமல்ல. இலகுவில் தீர்வு காண முடியும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

### எரியும் பிரச்சினைகள்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர், காணாமல் போகச்செய்யப்பட்டிருப்பவர்கள் பற்றிய பொறுப்பு கூறுதல், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தை வெளியேற்றி, இராணுவம் ஆக்கிரமித்துள்ள காணிகளை மீளக் கையளித்தல், யுத்தம் முடிவடைந்து ஏழு வருடங்களாகிவிட்ட போதிலும், இன்னும் அகதிகளாக இடம் பெயர்ந்திருப்பவர்களை மீள்குடியேற்றுதல், மீள் குடியேற்றப்பட்டுள்ளவர்களுக்கான முறையான வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் முன்னாள் போராளிகள், விதவைகள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் மறுவாழ்வு போன்ற பல பிரச்சினைகள் இன்று எரியும் பிரச்சினைகளாகத் தீவிரம் பெற்றிருக்கின்றன.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் நம்பிக்கை யூட்டி, முன்னோக்கி நகர்ந்து செல்வதற்கான சூழலை ஏற்படுத்தும் வகையில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் நல்லாட்சி அரசு தாங்கள் எதிர்பார்த்தவாறு, பிரச்சினைகளுக்கு முடிவேற்படுத்துவதற்காகச் செயற்பட்டு வருகின்றது என்ற நம்பிக்கையுடன் கூடிய எண்ணம் பாதிக்கப்பட்ட மக்கள் மனங்களில் ஏற்பட வழி வகுக்கும்.

பிரச்சினைகள் தீர்ந்து நல்ல முறையில் வாழலாம் என்று மிகுந்த நம்பிக்கையோடு வாக்களித்து உருவாக்கப்பட்ட புதிய அரசு, மக்களின் நம்பிக்கையை வளர்த்துச் செல்வதில் தவறி வருகின்றது. இருக்கும் நம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்வதற்குக் கூட அரசு முயற்சி செய்வதாகக் கூற முடியவில்லை.

இதனால், தங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டிய அரசு, பாராமுகமாக நடந்துகொள்ளும் ஒரு சூழலில் அந்த அரசின் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமையின் செயற்பாடுகளைச் சரியான செயற்பாடுகள் என்று பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையையும் ஏற்பட்டிருக்கின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் அரசு தொடர்ந்து அமைதி காக்க முடியாது. அல்லது அந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து பாராமுகமாக நடந்து கொள்ளவும் முடியாது.

காலத்தை இழுத்தடித்து, மூழ்கடித்து விடலாம் என்று எண்ணிச் செயற்படுவதற்கு அது ஒரு சாதாரண பிரச்சினையல்ல. இதனை அரசு நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை, இந்த அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிச் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட தலைவர்களும் இதனைத் தீவிரமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய பிரச்சினை என்பது ஆழமாக வேரூன்றி பாதகமான பல்வேறுநிலைமைகளை ஏற்படுத்தக் கூடிய மிக மோசமான பிரச்சினை என்பது எல்லோருக்கும் தெரியும்.

காணாமல்போயிருப்பவர்கள் இல்லாமல் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்று அரசு வெளிப்படையாகக் கூற முடியாத நிலைமையிலேயே உள்ளது. அதேவேளை, அவர்கள் உயிரோடுதான் இருக்கின்றார்கள் என்று இலகுவாகக் கூற முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குள் அரசு தள்ளப்பட்டிருப்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.



இத்தகைய இரண்டும் கெட்டான நிலைமையில், காணாமல் போயிருப்பவர்கள்பற்றிய பிரச்சினை குறித்து அரசு ஏதோ ஒரு வகையில் பொறுப்பு கூறியே ஆக வேண்டும். காலம் தாழ்த்துவதன் மூலம், இந்தப் பிரச்சினையில், பாரதூரமான விளைவுகளை நோக்கி அரசு நகர்கின்றது என்றே கூற வேண்டும்.

### காணிப்பிரச்சினை

காணி விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமே இல்லையென்றே கூற வேண்டும். அரசு இந்த விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றது. காணி உரிமையாளர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருந்தாலும், அதற்கு மனிதாபிமான ரீதியில் தீர்வு காண வேண்டியது அரசின் பொறுப்பாகும். அதனைத் தட்டிக்கழிக்கவோ அல்லது இழுத்தடித்து பிரச்சினையை மழுங்கடிக்கவோ முடியாது.

காணிப் பிரச்சினையில் மக்களின் நிலைப்பாடே முன்னுரிமை பெற வேண்டும். அரசினதோ இராணுவத்தினரதோ நலன்களை முன்னிலைப்படுத்துவது என்பதை, அராஜகமாகவும், ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட எதேச்சதிகாரப் போக்கின் வெளிப்பாடாகவே கருத வேண்டும்.

கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் அரசிடம் அரச காணிகளைக் கோரவில்லை. அவர்கள் காலம் காலமாகக் குடியிருந்து வந்த தமது காணிகளையே திருப்பித் தருமாறு கோருகின்றனர்.

அரச சட்ட விதிகளுக்கு அமைவாக அங்கீகாரமளிக்கப்பட்ட நிலையிலேயே மக்கள் அந்தக் காணிகளில் முன்னர் வாழ்ந்திருந்தார்கள்.

அவர்கள் சுயநலத் தேவைக்காகவோ அவர்களின் தனிப்பட்ட காரணங்களுக்காகவோ அந்தக் காணிகளை விட்டு இடம்பெயர்ந்து செல்லவில்லை. உயிரச்சுறுத்தல் ஏற்பட்டிருந்ததன் காரணமாகவே அவர்கள் இடம்பெயர நேர்ந்திருந்தது.

ஆனால், யுத்த மோதல்களைச் சாட்டாக வைத்து அந்தக் காணிகளைக் கையகப்படுத்தியுள்ள இராணுவம் தேசிய பாதுகாப்புக்காகப் பொதுமக்களுடைய காணிகளில் தான் நிலைகொண்டிருப்போம் என்று நியாயம் பேசுவதும், பிடிவாதம் பிடிப்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களுடைய காணிகளை மீளப்பெற்றுக் கொடுப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, அரசு கூறும் காரணங்களை ஏற்றுக் கொண்டு மௌனம் சாதிக்கும் ஒரு போக்கிலேயே செயற்பட்டு வருவதாகக் கருதப்படுகின்றது.

காணிகளைவிடுவிப்பதற்காக நடத்தப்படுகின்ற போராட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கலந்து கொள்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றார்கள். அந்தக் காணிகளை அரசு விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்கள்.

ஆனால், அரசியல் ரீதியாக நல்லுறவையும் இணக்கப்பாட்டையும் கொண்டுள்ள கூட்டமைப்பின் தலைமை காணிப் பிரச்சினை குறித்து விசேடமாக அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிய வில்லை.

### நம்பிக்கை ஏற்படுத்தப்படவில்லை

அரசுக்கு ஆதரவை வழங்கிக் கொண்டு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கின்றார்களே என்ற ஆதங்க உணர்வு அவர்களை படிப்படியாக ஆக்கிரமித்து வருகின்றது.

இதனால், இந்தத் தலைவர்களை நம்பியிருப்பதில் இனிமேல் பயனில்லை. நாங்களே எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று அவர்கள் உணரவும், அந்த உணர்வின் அடிப்படையில் செயற்படவும் ஆரம்பித்துள்ளனர்.

அரசுக்கு ஆதரவு வழங்கிச் செயற்படும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசுடனான நல்லுறவை ஏன் பயன்படுத்தத்தயங்குகின்றது என்ற கேள்வி மக்கள் மனங்களில் பூதாகரமாக எழுந்து நிற்கின்றது.

### தங்கள் கைகளில் பிரச்சினைகளை எடுக்கும் போக்கு

இத்தகையதோர் அரசியல் ரீதியான மன நிலையிலேயே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பில் அரசு பொறுப்புகூற வேண்டும் எனக் கோரி, அரசியல் தலைமைகளைப் புறந்தள்ளி, 14 தாய் மார்கள் வவுனியாவில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)






பொன்.வேணு கிருஷ்ணா

### பயணத்தடை அமெரிக்க நலன்களை பாதித்து குழப்பங்களை உருவாக்கும்

பயணத்தடையை மீண்டும் அமுலாக்குவது குழப்பங்களை கட்டவிழ்த்து விடலாம் என்று மத்திய மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் இரு அமெரிக்க மாநிலங்கள் தெரிவித்திருக்கின்றன.

ட்ரம்ப் விதித்த பயணத்தடைக்கு எதிராக தேசிய அளவில் வழங்கப்பட்டிருந்த தற்காலிக இடைநிறுத்தத்தை நீக்கிவிட்டு, டிரம்பின் நிர்வாக ஆணையை உடனடியாக அமுலாக்க தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டுக்கு எதிராக வாஷிங்டன் மற்றும் மின்னெசோட்டா மாகாண வழக்கறிஞர்கள் பதிலளித்துள்ளனர்.

அமெரிக்காவின் நலன்களுக்கு டிரம்ப் விதித்த தடை நீண்டகால சேதங்களை உருவாக்கலாம் என்ற முன்னாள் மூத்த உளவுத்துறை, வெளியுறவு கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளின் எச்சரிக்கையை உள்ளடக்கியதாக இந்த அறிக்கையின் ஒரு பகுதி இருந்தது.

SOURCE:HTTP://WWW.TWINCITIES.COM/

WASHINGTON, MINNESOTA WIN TEMPORARY BLOCK TO TRUMP'S TRAVEL BAN NATIONWIDE



MINNESOTA ATTORNEY GENERAL LORI SWANSON

### தனது வர்த்தகம் பாதிப்பதால், ஈரான் மீதான அமெரிக்க தடைக்கு சீனா எதிர்ப்பு




சீன வர்த்தகங்களை பாதிக்கின்றது எனக் கூறி, ஈரான் மீது அமெரிக்க அதிபர் டொனல்ட் ட்ரம்பின் நிர்வாகம் விதித் திருக்கும் புதிய தடைகளுக்கு எதிராக சீனா அதிகாரபூர்வமான எதிர்ப்பு தெரி வித்திருக்கிறது,

ஈரானின் ஆயுதம் வாங்கும் வலையமைப்பை இலக்கு வைப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்திருக்கும் தடைப் பட்டியலில், சீனாவின் இரண்டு நிறுவனங்களும், மூன்று தனிநபர்களும் அடங்குகின்றனர்.

மூன்றாவது கட்சிகளைப் பாதிக்கின்ற ஒரு தலைப்பட்சமான தடை நடவடிக்கைகள் உதவியாக அமையாது என்று சீனாவின் வெளியுறவு அமைச்சின் செய்தி தொடர்பாளர் லு காங் தெரிவித்துள்ளார்.

பேலிஸ்டிக் ஏவுகணை சோதனையை ஈரான் சோதித்த சிறிது நேரத்தில், டொனல்ட் ட்ரம்ப் அதிபராக பொறுப்பேற்ற பின்னர் முதலாவது தடை நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டன.

### ட்ரம்ப் நியமித்த நபரை அட்டோர்னி ஜெனரலாக உறுதி செய்தது அமெரிக்க செனட் அவை



ட்ரம்ப் நியமித்த அட்டோர்னி ஜெனரல் ஜெஃப் செஷன்ஸ்

இது தொடர்பாக நடந்த வாக்கெடுப்பில், ஜெஃப் செஷன்ஸுக்கு ஆதரவாக 52 வாக்குகளும், எதிராக 47 வாக்குகளும் கிடைத்துள்ளன.

ஜெஃப் செஷன்ஸின் நியமனம் தொடர்பாக இரு வேறு கருத்துக்களால் தொடர்ச்சியாக பிளவுபட்ட செனட் அவையின் விசாரணைக்கு பிறகு, ஜெஃப் செஷன்ஸ் அட்டோர்னி ஜெனரலாக உறுதி செய்யப்பட்டுள்ளார்.

இந்த விசாரணையின்போது சிவில் உரிமைகள் தொடர்பாக ஜெஃப் செஸின் முந்தைய நிலைப்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை ஜனநாயக கட்சியினர் எதிர்த்தனர்.

டொனால்ட் ட்ரம்பின் மிகவும் சர்ச்சைக்குரிய நியமனங்களில், அலபாமா செனட் உறுப்பினரான ஜெஃப் செஷஸின் நியமனமும் ஒன்றாகும்.

பெரும்பாலும் இந்த வாக்கெடுப்பு கட்சி நிலைப்பாட்டின்படியே நடந்தது. மேற்கு வர்ஜீனியாவை சேர்ந்த ஜோமன்சின் என்ற ஜனநாயக கட்சியின் செனட் உறுப்பினர் மட்டுமே ஜெஃப் செஷன்ஸுக்கு வாக்களித்துள்ளார்.




### மகளின் ஆடை தயாரிப்பை விற்க மறுத்த நிறுவனம் மீது ட்ரம்ப் விமர்சனம்

'மிகவும்' நியாயமற்ற முறையில் இவான்கா நடத்தப்பட்டுள்ளார் என்று சில்லறை ஆடை விற்பனையாளரான நார்ட்ஸ்ட்ரம் குறித்து தனது டுவிட்டர் பதிவில் டொனால்ட் ட்ரம்ப் கருத்து வெளியிட்டார்.

டொனால்ட் ட்ரம்பின் இந்த டுவிட்டர் பதிவை பொருத்தமற்ற பதிவு என்று ஜனநாயகக் கட்சியை சேர்ந்த ஒரு செனட் உறுப்பினர் கருத்து தெரிவித் திருக்கும் வேளையில், நெறிமுறைகளின் தலைவரான ஒரு முன்னாள் வெள்ளை மாளிகை அதிகாரி ட்ரம்பின் கருத்தை மூர்க்கத்தனமானது என்று குறிப்பிட் டுள்ளார்.

முன்னதாக இந்த மாதத்தில், போதுமான அளவு விற்பனையில்லை என்ற காரணத்தைக் குறிப்பிட்டு, இவான்கா டிரம்பின் ஆடை தயாரிப்பை கைவிட்ட ஐந்தாவது ஆடை விற்பனையாளர் நார்ட்ஸ்ட்ரம் என்பது குறிப்பிடத்தக்கது.



Donald Trump and Ivanka Trump
(Photo: Albert H. Teich / Shutterstock)

President Donald Trump lashes out against retailer Nordstrom for cutting ties with daughter Ivanka

President Donald Trump personally attacked a retailer that's dialing back its business relationship with his daughter. Nordstrom is reportedly cutting back its stock of merchandise marketed by Ivanka Trump and has dropped her clothing from its website in the face of a boycott aimed at companies that do business with her. I am absolutely thrilled, and I know the vast majority of Grab Your Wallet participants will be as well, said Shannon Coulter, who co&founded the boycott group Grab Your Wallet to protest the president and his family. The decision did not please Trump, who tweeted out a complaint against Nordstrom Wednesday morning, shortly after he spoke to the National Sheriff's Association to complain about judicial rulings against his travel ban and about 20 minutes after his daily intelligence briefing was scheduled to begin.

WASHINGTON BECAME THE FIRST STATE TO SUE, WITH ATTORNEY GENERAL BOB FERGUSON SAYING THE ORDER WAS CAUSING SIGNIFICANT HARM TO RESIDENTS AND EFFECTIVELY MANDATES DISCRIMINATION. MINNESOTA JOINED THE SUIT THIS WEEK.

"FIVE FEDERAL JUDGES AROUND THE COUNTRY HAVE ISSUED ORDERS THAT RESTRICT THE TRAVEL BAN EXECUTIVE ORDER. I SUPPORT STRONG MEASURES TO PROTECT THE SECURITY OF THE UNITED STATES," MINNESOTA ATTORNEY GENERAL LORI SWANSON SAID IN A STATEMENT FRIDAY. "I ALSO SUPPORT THE BEDROCK OF THAT SECURITY—NAMELY, THE CONSTITUTION OF THE UNITED STATES." THE TWO STATES WON A TEMPORARY RESTRAINING ORDER WHILE THE COURT CONSIDERS THE LAWSUIT, WHICH SAYS KEY SECTIONS OF TRUMP'S ORDER ARE ILLEGAL AND UNCONSTITUTIONAL. COURT CHALLENGES HAVE BEEN FILED NATIONWIDE FROM STATES AND ADVOCACY GROUPS, WITH SOME OTHER HEARINGS ALSO HELD FRIDAY. "WASHINGTON HAS A PROFOUND INTEREST IN PROTECTING ITS RESIDENTS FROM THE HARMS CAUSED BY THE IRRATIONAL DISCRIMINATION EMBODIED IN THE ORDER," ATTORNEY GENERAL BOB FERGUSON SAID IN A BRIEF. MINNESOTA'S COMPLAINT SAID THE "EXECUTIVE ORDER HAS HAD IMMEDIATE AND SIGNIFICANT EFFECTS" IN THE STATE ON THE 30,000 FROM SOMALIA, SUDAN, IRAN, IRAQ, SYRIA, AND YEMEN, ON ITS HIGHER EDUCATION INSTITUTIONS, ITS BUSINESSES AND ITS ECONOMY. THE COMPLAINT TOLD THE TALE OF A 4-YEAR-OLD SOMALI GIRL WHO HAD WAITED HER WHOLE LIFE TO GET A TRAVEL VISA TO BE REUNITED WITH HER FAMILY IN MINNESOTA. THE YOUNG GIRL'S TRAVEL WAS DELAYED BECAUSE OF TRUMP'S DIRECTIVE. SHE WAS REUNITED WITH HER FAMILY THIS WEEK



(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




58

## ராஜீவ் காந்திக்கு பிரபா எழுதிய கடிதங்கள்

இந்திய - புலிகள் யுத்தம் மிகவும் கொடூரமானதாக - மூர்க்கத்தனம் மிக்கதாக - அமைந்தது. இந்தப் போரில் இந்திய இராணுவமும் விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகளும் பலத்த உயிரிழப்பைச் சந்தித்தன. ஆயினும், களமாடிய இரு தரப்பினரையும் விட, தமிழ்ப் பொதுமக்களே பேரிழப்புகளுக்கு முகம் கொடுத்தனர். அப்பாவிப் பொதுமக்கள் மீது இந்திய இராணுவம் பல அட்டூழியங்களை இழைத்தது; பயங்கரமான படுகொலைகளை நிகழ்த்தியது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் நாள், யாழ்ப்பாணம் மீது இந்திய இராணுவம் படையெடுப்பை நிகழ்த்திய அன்று, யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மித்த பிரம்படியில் நாற்பது பொதுமக்கள் மிருகத்தனமாக கொன்று குவிக்கப்பட்டனர். தலைவர் பிரபாகரனும் மூத்த தளபதிகளும் பிரம்படியில் வசிக்கிறார்கள் என்று தகவல் அறிந்த இந்தியப் படையணிகள் அவர்களைக் கொன்றொழிக்கும் நோக்கத்துடன், டாங்கிகள், கவச வாகனங்கள், சிறு பீரங்கிகள் சகிதம் அந்தப் பகுதிக்குள் பிரவேசித்தன. ஆயினும், பிரபாகரனும் அவரது தளபதிகளும் அங்கு காணப்படவில்லை என்பதால் விரக்தியும் கோபமும் அடைந்த இந்தியத் துருப்புக்கள், தமது வெறித் தனத்தை அப்பாவிப் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் நாளன்று, இந்திய அதிரடிப் படைகள் யாழ்ப்பாணப் பொது மருத்துவமனையில் நிகழ்த்திய மிருகத்தனமான கொலைக்களரி மன்னிக்க முடியாத கோரச் சம்பவமாகும். யாழ்ப்பாண மருத்துவமனைக்குள் மூர்க்கமாகப் பாய்ந்து சென்ற இந்தியப் படையினர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிகளால் சிலாவிச் சுட்டும், கைக் குண்டுகளை அங்குமிங்குமாக வீசி எறிந்தும், வைத்தியபீடத்தைக் கொலைக் களமாக மாற்றினர். இந்தப் பயங்கரமான வெறியாட்டத்தில் மருத்துவர்கள், தாதிமார், நோயாளிகள் அடங்க நூற்றுக்கும் அதிகமானோர் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண நகரில் இந்தக்கோரம் நிகழ்ந்து ஒரு வாரத்துக்குள், ஒக்ரோபர் மாதம் 27 ஆம் நாளன்று சாவகச்சேரிப் பட்டினத்தில் இன்னுமொரு கொலைவெறிச் சம்பவம் நிகழ்ந்தது. அன்றைய நாள் சாவகச்சேரிச் சந்தைச் சதுக்கத்தில் சனத்திரள் குவிந்திருந்த மதிய வேளையில், ஓர் இந்திய இராணுவ உலங்குவானூர்தி அங்கு விரைந்து வந்து ஏவுகணைகளாலும், இயந்திரத் துப்பாக்கிகளாலும் அப்பாவி மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நிகழ்த்தியது. இந்தக் கொடூரத் தாக்குதலில் முப்பது பொது மக்கள் கொல்லப்பட்டனர்; 75 பேர் படுகாயமடைந்தனர்.

இந்திய இராணுவத்தினர் தொடர்ச்சியாக நிகழ்த்திய படுகொலைகளையும் மற்றும் அட்டூழியங்களையும் விவரித் துக் கூறுவது இந்த நூலின் நோக்கமல்ல. தமிழர் தாயகத்தை இந்திய இராணுவம் ஆக்கிரமித்து நின்ற காலகட்டத்தில் நாலாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தொகையை நிரூபிக்க ஆவணப்படுத்தப்பட்ட



ஆதாரங்கள் உள்ளன. இந்தப் படுகொலைக் கொடூரங்களுடன் பல நூற்றுக் கணக்கான தமிழ்ப் பெண்கள் இந்திய இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனர். வீடுகளுக்குள் புகுந்து மக்களின் சொத்துக்களைச் சூறையாடல், மக்களை அடித்துத் துன்புறுத்தல், கொளுத்தும் வெய்யிலில் தார் வீதிகளில் மக்களை முழங்காலில் நிற்க வைத்தல் போன்ற பலரகமான அட்டூழியங்களை இந்தியப் படைகள் புரிந்தன.

(இந்திய-புலிகள் யுத்தத்தின ஆரம்ப காலகட்டத்தில் நானும் எனது மனைவியும் யாழ்ப்பாணம் வடமராட்சியில் இருந்தோம். இந்திய இராணுவத்தினால் வேட்டையாடப்பட்டு நாம் அனுபவித்த அவலங்களையும், தமிழ் மக்களுக்கு எதிராக இந்தியப் படைகள் புரிந்த அட்டூழியங்களையும் எனது மனைவி, *சுதந்திர வேட்கை* என்ற தனது நூலில் விவரித்து எழுதியிருக்கிறார்.)

> "தமிழர் தாயகத்தை இந்திய இராணுவம் ஆக்கிரமித்து நின்ற காலகட்டத்தில் நாலாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தொகையை நிரூபிக்க ஆவணப் படுத்தப்பட்ட ஆதாரங்கள் உள்ளன."

விடுதலைப் புலிகள் மீது இந்தியா போர்ப்பிரகடனம் செய்தபோது, மிகவும் கசப்பான - விரும்பத்தகாத இரு முடிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க இயக்கத் தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டது. ஒன்று சரணடைய வேண்டும். மற்றையது எதிர்த்துப் போராட வேண்டும். சரணடைவதென்றால் சாவைத் தழுவிக் கொள்வதுதான். அதுவும் வதைபட்டு - அவமானப்பட்டு - குற்றவாளிகள் போலத் தண்டிக்கப்பட்டு - இறுதியில் மடிந்து போவதுதான். அடுத்த வழி, இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போரா டுவது, இந்தத் தேர்வில் சாவு நிச்சயமானதுதான். ஆனாலும் அதேவேளை, சாவிலிருந்து தப்பவும் ஒரு வாய்ப்பு இருக்கவே செய்தது. அபூர்வமாக, சில சமயங்களில் வெற்றி வாய்ப்பும் இருக்கலாம். அதாவது, சாவுக்கு அஞ்சாத துணிவுடன், உறுதி தளராது, நம்பிக்கை தளராது, மதிநுட்பத்துடன் போரிட்டால் வெற்றி பெறுவதும் சாத்தியமாகலாம். எல்லாவற்றுக்கும் மேலாக இரண்டாவது தெரிவில் மகத்துவமான ஒரு பண்பியல்பு இருந்தது. அதாவது, ஓர் உன்னத இலட்சியத்துக்காக களமாடிச் சாவதில் மதிப்பும் கௌரவமும், வீரப் பண்பும் இருந்தன. இதன் காரணமாகவே இரண்டாவது மார்க்கத்தைத் தான் தேர்ந்தெடுத்தார் எனப் பிரபாகரன் என்னிடம் கூறினார். தென்னாசியாவின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்துப் போராட முடிவெடுத்த பொழுது, தளபதிகளிலிருந்து போராளிகள் வரை புலிப் படை வீரர்கள் அவரது தீர்மானத்தை ஆதரித்தார்கள். இந்திய இராணுவத்துடன் மோதுவது அழிவில் முடியும் என ஆரம்பத்தில் தமிழ் பொதுமக்கள் எண்ணிப் பயந்தார்கள். ஆயினும் காலப்போக்கில், இந்திய இராணுவத்தின் கொடுமைகளால் ஆத்திரமடைந்த மக்கள், புலி வீரர்களுக்கு முழு ஆதரவாக நின்றார்கள்.

வரலாற்றுப் புறநிலைகள் காரணமாக ஒரு தற்காப்பு யுத்த மூலோபாயத்தைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட பொழுதும், இந்தியாவுடன் சமரச இணக்கப்பாடு காண விடுதலைப் புலிகள் இயக்கம் கடும் முயற்சிகளை எடுத்தது. இந்தியாவுடன் போர் தொடங்கி மூன்று மாத காலத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மூன்று கடிதங்களை எழுதினார் பிரபாகரன். போர் நிறுத்தம் செய்து, பேச்சுக்களை நடத்தி, சமரச உடன்பாட்டுக்கு வருமாறு இந்தக் கடிதங்களில் வேண்டுகோள் விடுத்தார் புலிகளின் தலைவர். ஆனால், பதில் எழுதாது, இறுக்கமான மௌனம் சாதித்தது இந்திய ஆட்சிப் பீடம்.

விடுதலைப் புலிகள் மீது இந்தியா யுத்தப் பிரகடனம் செய்த மூன்றாவது நாள் (12 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 1987 ஆம் ஆண்டு) பாரதப் பிரதமருக்கு அனுப்பப்பட்ட முதலாவது கடிதம் வருமாறு:

*தலைமைச் செயலகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*
*12-10-1987*

*கனம், ராஜீவ் காந்தி அவர்கள்!*
*இந்தியப் பிரதம மந்திரி*
*புதுடில்லி.*

*கனம் பிரதம மந்திரி அவர்களே,*

*யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ள மிகவும் ஆபத்தான, பாரதூரமான நிலைமையை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

*இந்திய அமைதி காக்கும் படைகள் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது போர்ப்பிரகடனம் செய்து, இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. தற்பாதுகாப்புக்காக, எமது போராளிகளையும் பொதுமக்களையும் அழிவிலிருந்து காப்பதற்காக, நாம் இந்திய - சிறிலங்கா இராணுவங்களை எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.*

*மக்கள் ஆதரவுபெற்ற விடுதலை இயக்கமான புலிகள் இயக்கம் மீது, இந்திய அரசு யுத்தம் தொடுத்துள்ளதால் எமது மக்கள் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கம் மீது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்தப் போரானது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படைகளையே மீறுவதாக அமைந்துள்ளது. எமது மக்களின் கருத்தும் அதுவாகும்.*

*இந்தியப் படைகளும் சிறிலங்கா இராணுவமும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொண்டுள்ள இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பொது மக்களுக்கு பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்படும் பேராபத்து உருவாகியுள்ளது. இதனால் எழும் பாரதூரமான விளைவுகளுக்கு இந்திய அரசே பொறுப்பேற்க வேண்டும்.*

*இந்திய மக்கள் மீது எமக்குள்ள நல்லுறவின் அடிப்படையிலும், சமாதானமும் நல்லெண்ணமும் பேணப்படும் அவசியத்தை முன்னிட்டும், இராணுவ நடவடிக்கைகளை உடன் கைவிடும்படி இந்திய அமைதிப் படைக்குப் பணிக்குமாறு நான் உங்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.*

*வே. பிரபாகரன்,*
*தலைவர்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்.*

(தொடரும்...)

# விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதே நோக்கம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு



கொழும்பு, பெப்.15

விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் என்ற வகையில் விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டை விவசாயத் துறையில் சுபீட்சமடையச் செய்வதற்கு எனது பதவிக் காலத்தில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

-இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வடமேல் மாகாண மக்கள் நீண்ட காலமாக நீருக்காக கண்ணீர்வடித்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் வடமேல் மாகாணத்துக்கு நீரைப்பெற்றுக் கொடுக்கும் பெரிய அபிவிருத்தித் திட்டமாக வடமேல் மாகாண வாய்க்கால் திட்டத்தை நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆரம்பித்துவைத்தார்.

இதனையடுத்து, கலேவெல வெலமிட்டியாவ வித்தியாலயத்தின்விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பெரியளவான குளங்களை நிரப்பி விவசாய சமூகத்தினர் நீர்ப் பிரச்சினைக்கு முகங்கொடுக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசியல் கட்சி வேறுபாடுகளின்றி நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுபடுவது அனைவரதும் பொறுப்பாகும். அரசை அமைப்பதற்கும் அரசை மாற்றுவதற்கும் தேர்தலால் முடியும். இன்று செய்ய வேண்டியது பேதங்களை மறந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றுபடுவதேயாகும்.

அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் நேர்மையாக தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவார்களாயின் நாடு இன்று முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகளில் இருந்து மீள்வது கடினமானதல்ல.

தற்போதைய அரசின் நோக்கம் அபிவி ருத்தி இலக்கை நோக்கி தொடர்ந்தும் பயணிப்பதாகும். எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும் நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றுவோம்.

இந்தப் பிரதேசத்தில் சிறுநீரக நோய்க்கு காரணமாகவுள்ள குடி தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

நிர்மாணப் பணிகளில் நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்துக்கு சுமார் 16 ஆயிரம் மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 2024 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்படும்.-என்றார். (ஐ)

## தொடரும் மக்கள் ...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் போராட்டத்தின் அடிப்படையில் தாங்களே சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்துவதற்கு அவர்கள் முன்வந்திருந்தார்கள்.

அவர்கள் தமது அரசியல் தலைமைகள் மீது நம்பிக்கை இழந்தமையின் அடையாளமாகவே வவுனியா உண்ணா விரதப் போராட்டத்துக்கு முன்னதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடைய உருவப்படத்துக்குத் தீ மூட்டியிருந்தார்கள். கூட்டமைப்பின் தலைவருடைய படத்துக்குத் தீ மூட்டுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நோக்கத்தில் செய்யப்பட்டமையைவிட, அவர்கள் தமது ஏமாற்ற உணர்வை அதன் மூலம் வெளிப்படுத்தியிருந்தார்கள் என்றே கொள்ள வேண்டியிருக்கின்றது.

தலைவர்களுடைய உருவப்படங் களுக்குத் தீ மூட்டுவது என்பது எத்தகைய ஒரு நிலையிலும், அரசியல் ரீதியாகவோ வேறு எந்த வகையிலுமோ, ஏற்றுக் கொள்ள முடியாததே. அத்தகைய நடவடிக்கை என்பது மிகவும் மோசமானது. பாரதூரமானது. ஆனால் மக்கள் அத்தகைய மன நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றமையை, திகைப்போடும் அதிர்ச்சியுடனும் பார்க்க வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

போருக்குப் பிந்திய இலங்கையில் இத்தகைய நிலைமை உருவாகி வருவது ஆரோக்கியமானதல்ல. பிரச்சினைகளுக்கு அரசியல் தலைமையின் கீழேயே நிரந்தரமான உறுதியான தீர்வைக் காணமுடியும். அதற்குப் பாதிக்கப்பட்டு தீர்வுக்காக ஏங்கும் மக்களைச் சரியான முறையில் அரசியல் தலைமைகள் கையாண்டு, அவர்களைச்சரியான முறையில் வழிநடத்திச் செல்லக் கூடிய தலைமைகள் அவசியம்.

ஏற்கனவே உருவாகியிருக்கும் அரசியல் தலைமைகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சரியான முறையில் கையாண்டு, அவர்களுடைய நம்பிக்கையை இழந்து செல்வதென்பது விரும்பத்தக்கதல்ல.

அரசின் மீது நம்பிக்கை இல்லை என்ற நிலைமை படிப்படியாக உயர்ந்து வருகின்றது. இந்த நிலையில், தமக்குரிய அரசியல் தலைமைகள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்து தாங்களாகவே செயற்பட முனைகின்ற போக்கும் வளர்ந்து வரப்பார்க்கின்றது. இந்த நிலைமைகள் தொடர்பாக தீவிர கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை முன்வரவேண்டும். இது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.



புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின் சமூகத்துடன் இணைந்துள்ள முன்னாள் பெண் போராளி ஒருவருக்கு இராணுவத்தின் மகளிர் படையணியால் கணினித் தொகுதி ஒன்று வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகேஸ் சேனாநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய மயிலிட்டியில் அமைந்துள்ள 7 ஆவது மகளிர் படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் கீதிகா ரங்கோட்டே இதனை வழங்கினார். (ஐ)

# இலங்கை - இந்தியா இடையில் நல்லதோர் உறவு நிலவுகிறது

## அமைச்சர் பழனி திகாம்பரம் கூறுகிறார்

கொழும்பு, பெப்.15

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்லதோர் உறவு காணப்படுகிறது. கலாசார ரீதியாகவும் நாங்கள் ஒன்றுபட்டு இருக்கின்றோம்.

--இவ்வாறு மலை நாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 4 ஆயிரம் தனிவீடமைப்புவேலைத் திட்டத்துக்கு அமைய நேற்றுமுன்தினம் நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்த லாவ பொகவனா தோட்டத்தில் இடம்பெற்ற அடிக்கல் நடும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு மலையகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு இருக்கின்றது. இந்த மாற்றத்தை ஏற்படுத்திய தமிழ் முற்போக்கு கூட்டணி மலையக மக்களுக்குப் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களைமுன்னெடுத்து வருகின்றது.

ஜனாதிபதி தேர்தலின் போது நாம் வேண்டிக் கொண்டதற்கு அமைவாக மலையகத்தோட்டப் பகுதிகளில் அமைக்கப்படும் தனி வீட்டு திட்டத்துக்கான காணி உரிமை உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கு அமைவாக அண்மையில் தலவாக்கலையில் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கினார்.

இந்திய அரசு இலங்கைக்கு 50 ஆயிரம் வீடுகளை வழங்கியது. அதில் 4 ஆயிரம் வீடுகள் மலையகத் தோட்டப் பகுதிகளுக்குவழங்கப்பட்டன. எனது அமைச்சின் கீழ் இந்த 4 ஆயிரம் வீடுகளை மலையக மக்களுக்காக நிர்மாணிக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

மலையக சமூகம் எனக்குத் தேவை. அவர்களின் உணர்வு அறிந்தவன் நான். இதனால் இன்று தமிழ் முற்போக்கு கூட்டணி அமைச்சர்களான ராதாகிருஷ்ணன், மனோ கணேசன் ஆகியோருடன் ஒன்றிணைந்து நாம் செயற்பட்டு வருகின்றோம்.

--என்றார். (ஐ)

## சைக்கிள் திருட முற்பட்டவர் அகப்பட்டார்

நெல்லியடி நகரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை போலித் திறப்பு போட்டு திறக்க முற்பட்ட நபர் ஒருவரை நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் கையும் மெய்யுமாகப் பிடித்து நெல்லியடிப் பொலிஸில் ஒப்படைத்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நகர்ப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை மேற்படி நபர் இவ்வாறு திறக்க முற்பட்டார் அதன்போது அதனை அவதானித்த வர்த்த சங்கத்தினர் அவரை மடக்கிப் பிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-40)

## பிணைமுறி மோசடி: விசாரணைக் குழு கலந்துரையாடல்

கொழும்பு, பெப்.15

மத்தியவங்கியில் இடம்பெற்ற பிணைமுறி விற்பனை மோசடி தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்ட மூத்தசட்டத்தரணிகள் குழுவுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளது.

ஆணைக்குழுவுக்கு அவசியமான ஏனைய சட்ட உதவிகள் மற்றும் ஆதாரங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது என்று சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பிணைமுறி தொடர்பான ஆவணங்களை ஆய்வுசெய்யும் நடவடிக்கையில் ஆணையாளர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர் என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் சுமதிபால உடுகம சூரிய கூறியுள்ளார்.

இந்த நிலையில ஆணைக் குழுவுக்கு உதவி வழங்குவதற்கென நியமிக்கப்பட்ட சட்டக் குழுவில், மூத்த மேலதிக சட்டத்தரணிகள் பலர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெங்குத் தடுப்புக் குறித்த விழிப்புணர்வு; இராணுவத்தினரும் பொலிஸாரும் நடத்தினர்

## காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தில்





யாழ்ப்பாணம்,பெப்.15


இலங்கை இராணுவத்தின் ஏழாவது மகளிர் அணி யும், யாழ். பொலிஸாரும் இணைந்து காங்கேசன்துறை, நல்லிணக்கபுரத்தில், டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை கடந்த புதன்கிழமை முன்னெடுத்தனர்.

யாழ். பாதுகாப்புப் பிரிவின் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவின் ஏற்பாட்டில்இடம்பெற்றமேற்கண்டநிகழ்வில் அவர் கருத்து வெளியிடுகையில் -

மக்கள்- பெற்றோர் - தமது சுற்றுச் சூழலை சுத்தமாகப் பேணிக் காக்கவும், அதற்காக அக்கறையுடன் செயற்படவும், பிள்ளைகளின் அறிவை மேலோங்கச்செய்யும்நல்லொழுக்கத்தை புகட்டவும் அக்கறையுடன் உழைக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில், மேஜர் லால் குமாரசிறி, 515 ஆவது பிரிக்கேட்டின் மேஜர் கீதிக்கா ரண்கொற்றகே, யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் சிந்து பாமினி, காங்கேசன்துறை சுகாதார பரிசோதகர் ஆர்.தயாபரன், கிராமசேவகர் ரவீந்திரன், கிராமசேவகர் கஜந்தன், அபிவிருத்தி அதிகாரி ரி.தயாபரன் மற்றும் இராணுவப் பணியாளர்கள், பெற்றோர் எனப் பலர் பங்குபற்றினர்.

# அனுமதியின்றி மரம் ஏற்றிய படி ரக வாகனம் சிக்கியது



நெல்லியடி,பெப்.15

அனுமதிப்பத்திரமின்றி மரங்களை ஏற்றிச் சென்ற படி ரக வான் ஒன்றைத் தாம் கைப்பற்றினர் என்று நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ.பிரியந்த தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நெல்லியடிப் பொலிஸார் ரோந்துசென்று கொண்டிருந்தபோது வதிரிச் சந்திப் பகுதியில் சென்றுகொண்டிருந்த படி ரக வாகனத்தைமறித்துச் சோதனை செய்தனர்.இதன்போது அனுமதிப்பத்திரமின்றி அறுக்கப்பட்ட மரத்துண்டங்கள் ஏற்றிச் செல்லப்பட்டமை தெரியவந்தது. இதனையடுத்து அவை கைப்பற்றப்பட்டன என்று பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-40)

# இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை கிளிநொச்சியில் ஆரம்பம்

இங்கிலாந்தின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர்களால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிய இலவச மருத்துவ முகாம் மற்றும் இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை என்பன எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் நடைபெறவுள்ளன.

பிரித்தானியாவின் இம்மானுவேல் கிறிஸ்தவ ஐக்கியம் என்ற அமைப்பின் அனுசரணையுடன் 'அன்பு இல்லம்' என்ற அறக்கட்டளை இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ள அதன் இயக்குநர் போதகர் கீத் பெஞ்சமின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கனவே இரண்டு தடவைகள் (2011, 2013) இந்தமுகாம் வவுனியா வைத்தியசாலையில் நடைபெற்றிருந்தது. இதில் நூற்றுக்கும் அதிகமானோர் பயன் பெற்றிருந்தனர். அவர்களில் அதிகமானோர் யுத்தத்தால் பாதிப்படைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# போராட்டம் நடைபெற்ற காலத்திலேயே கல்வியை வளர்த்த தலைவர் பிரபாகரன்

## சிறிதரன் எம்.பி. பெருமிதம்

போராட்டகாலத்திலேயே தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் கல்விக்குத் தனித்துறையை வைத்துக் கல்வியை வளர்த்தார். அந்தக் காலத்தில் கல்வி அதிகாரங்கள் செம்மைப்படுத்தப்பட்டன. ஆனால், இன்று நவீன தொழில்நுட்பங்கள் என்ற போர்வையில் மாணவர்கள் வேறு திசைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இது அவர்களைவிலங்கு போடும் அல்லது சமூகத்தில் இருந்து தள்ளி வைக்கின்ற சூழலாக உள்ளது.

-இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

தென்னாபிரிக்காவில் கூட விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா கல்விச் சீர்திருத்தத்தைச் செய்திருந்தார்.

தேசியத்தலைவர் பிரபாகரன் கல்விக்குத் தனித்துறையை வைத்து கல்வியை வளர்த்தார்.

இன்று நவீன தொழில்நுட்பங்கள் என்ற போர்வையில் மாணவர்கள் வேறு திசைகளுக்குள் கொண்டு செல்லப்படுகின்றனர். இதிலிருந்து வெற்றி பெற வேண்டுமானால் உலகத்தில் எந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக எங்களை வளர்த்துக்கொள்ள முடியுமோ அதனையே நாங்கள் கொண்டு வரவேண்டும்.

தேசியம் என்பது கல்வியிலோ, விடுதலையிலோ மட்டுமல்ல தேசியம் சார்ந்த பொருளாதாரம், தேசியம் சார்ந்த உரிமைகள் என்று இருக்கின்றன. அதனை மாணவர்கள் கையில் எடுத்தால் நல்ல நிலையை அடைய முடியும்.

என்னால் முடியும் என்ற நம்பிக்கை இருக்கும்வரை ஒரு மனிதனால் சாதிக்க முடியும். எத்தனை துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் யார் ஏறி மிதித்தாலும் நம்பிக்கை, சத்தியம், நேர்மையோடு நடந்தால் எல்லாவற்றையும் முறியடிக்கலாம்.

இந்த மைதானத்தில் இன்று நிம்மதியாகக் கூடி இருக்கின்றோம் என்றால் இதற்கு, விடுதலைக்காகப் போராடிய எத்தனையோ ஆயிரம் உறவுகளின் இரத்தமும், சதையும், கண்ணீரும் தான் காரணம்.

எமது தேசம், மக்கள், போராட்டம் பற்றி மறந்து விடக் கூடாது. அது இரத்தத்திலும் உணர்விலும் கலந்திருக்க வேண்டிய ஒரு விடயம். நாம் சளைக்காது நம்பிக்கையோடு செயற்பட்டு நல்ல மாணவர்களாக உருவாக வேண்டும். - என்றார். (ஐ-40)

# முல்லையில் தனியார் போக்குவரத்துக்கு நிரந்தர வழித்தட அனுமதிப் பத்திரம்!

## மாகாணப் போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் தகவல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு நிரந்தர வழி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார்.

தம்மால் நியமிக்கப்படவிருக்கும் 3 பேர் அடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையிலும், அமைச்சால் மேற்கொள்ளப்படவிருக்கும் கள ஆய்வின் அடிப்படையிலும் எந்த உரிமையாளரும் பாதிக்கப்படாத வகையில் இந்த அனுமதி வழங்கல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத் தனியார் பேருந்து உரிமையாளர்களைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டவர்கள், வழித்தடங்களில் அளவுக்கு அதிகமான பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதால் தாங்கள் சேவை வழங்குவதற்கான செலவீனத்தைக் கூடப் பெறமுடியாத நிலையில் உள்ளார்கள் எனவும் தெரிவித்தனர்.

குறிப்பாக சேவை வழங்குநர்களில் மூன்று பிரிவினர் உள்ளனர். இறுதி யுத்தத்தின்போது தமது பேருந்துகளை முள்ளிவாய்க்கால் பகுதியில் விட்டுச்சென்றவர்கள் ஒரு பகுதியினராகவும், நீண்டகாலமாகச் சேவையில் ஈடுபடுபவர்கள் மற்றுமொரு பகுதியினராகவும், மீள்குடியேற்றத்தின் பின்னர் சேவையை வழங்குபவர்கள் வேறொரு பகுதியினராகவும் உள்ளனர் என அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதனாலேயே அதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், இப்பிரச்சினைக்குத் தகுந்த பொறிமுறையை ஏற்படுத்தித் தீர்வு காணத் தம்மால் 3 பேர் கொண்ட விசாரணைக்குழு ஒன்று அடுத்த வாரம் நியமிக்கப்படும் எனவும் அவர்கள் ஒவ்வொரு உரிமையாளர்களிடமும் விசாரணை மேற்கொண்டு அது தொடர்பாக அந்தக் குழுவினர் தமக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என்றும் கூறினார். அதன் அடிப்படையில் நிரந்தர வழி அனுமதிப் பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம112)

### சர்வதேச தரத்தில் அமைகிறது சிறை!

சர்வதேச தரத்தில் மனிதாபிமானம் பாதுகாக்கப்படும் வகையில் இலங்கையின் முதலாவது சிறைச்சாலை அங்குணகொலபெலெஸ்ஸ பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தச் சிறைச்சாலை வளாகத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிடச் சென்றிருந்தார்.

அதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர், புதிய சிறைச்சாலை வளாகத்தினுள் நவீன வசதிகள் பல ஸ்தாபிக்கப்படவுள்ளன. தற்போது சிறைச்சாலைகளில் நெரிசல் காணப்படுகிறது. - என்றார். (ஐ)



# சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிபதி குன்ஹா வழங்கிய தீர்ப்பின் முழு விவரம்!

பெங்களூர், பெப்.15

ஜெயலலிதாவுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில், கடந்த 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி.குன்ஹா தீர்ப்பு அளித்தார்.

அந்தத் தீர்ப்பின் முழு விவரம் வருமாறு:-

கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை, ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்துள்ளார். அந்தக் காலகட்டத்தில், அவரும், அவருடன் குற்றம் சாட்டப்பட்டவர்களும், 53.6 கோடி ரூபா அளவுக்கு சொத்துக்கள் வாங்கி உள்ளனர்.

ஆனால், அந்தச் சொத்துக்களை வாங்குவதற்கான பணம் எங்கிருந்து வந்தது என்ற கணக்கை, வருமான வரித் துறைக்கு, அவர்களால் சரியாக காட்ட முடியவில்லை.

**திருப்திகரமான கணக்கு இல்லை**

ஜெயலலிதா முதல்வராக இருந்த கால்த்தில், அவரின் வருமானம் 9.91 கோடி ரூபா. அதில், அவரின் செலவு, 8.49 கோடி ரூபா. இந்த வருமானத்தை மீறியே, அவரும், அவருடன் குற்றம் சாட்டப்பட்டுள்ள, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி ஆகியோரும், தங்கள் பெயரிலும், சில நிறுவனங்கள் பெயரிலும், 53.6 கோடி ரூபாவுக்கு அசையாச் சொத்துக்களை வாங்கி உள்ளனர்.

இதுதொடர்பான, திருப்திகரமான கணக்கை அவர்களால் சமர்ப்பிக்க முடியவில்லை. அதனால், வருமானத்துக்கு அதிகமாக ஜெயலலிதா சொத்துக்களை வாங்கி உள்ளார் என்பதோடு, அதற்கான பணத்தைப்பெற, அவரும், அவருடன் குற்றம் சாட்டப்பட்டவர்களும், கிரிமினல் சதிச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

**குற்றவாளிகளே!**

இதை, அரசு தரப்பு, சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபித்துள்ளது. எனவே, ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி ஆகியோர், இந்திய தண்டனை சட்டம் பிரிவு 120 - பி, 109 மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவுகள் 13 -1, மற்றும் 13 -2 இன் கீழ், தண்டனை பெறக்கூடிய குற்றம் புரிந்து உள்ளனர். அதனால், அவர்கள் குற்றவாளிகளே.

ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக சொத்துக்களை வாங்கிக் குவிக்க, சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் துணையாக இருந்துள்ளனர் என்பதையும், அரசு தரப்பு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளது.

எனவே, வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்கள் வாங்கி குவித்துள்ள ஜெயலலிதாவுக்கு, நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்படுகிறது.

அபராதத்தை அவர் கட்டத் தவறினால், கூடுதலாக ஓர் ஆண்டு சிறை, தண்டனை அனுபவிக்க வேண்டும். ஜெயலலிதாவுக்கு உடந்தையாக இருந்த, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசிக்கும், நான்கு ஆண்டு சிறைத்தண்டனையும், தலா 10 கோடி ரூபா அபராதமும் விதிக்கப்படுகிறது. அபராதத்தை கட்டத்தவறினால், கூடுதலாக ஓர் ஆண்டு சிறையில் இருக்க நேரிடும்.

**வங்கிப் பணம் முடக்கம்**

குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதால், அவர்களின் வங்கிக் கணக்கில் உள்ள பணம் மற்றும் நிரந்தர வைப்பு நிதிகள், அபராதத்திற்கு ஈடாக எடுத்துக் கொள்ளப்படும்.

இது தொடர்பாக, தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட உள்ளன. வங்கிக் கணக்கில் உள்ள பணம், அபராதத் தொகைக்கு ஈடாகவில்லை எனில், நீதி மன்ற பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ள அவர்களின் தங்க, வைர நகைகள் விற்கப்பட்டு, மீதமுள்ள அபராதம் தொகைக்குவரவு வைக்கப்படும்.

அந்த நகைகளை, ரிசர்வ் வங்கிக்கோ அல்லது பாரத ஸ்டேட் வங்கிக்கோ அல்லது பொது ஏலம் மூலமாகவோ விற்கலாம். விற்றவை போக, மீத்முள்ள நகைகள் அரசால் பறிமுதல் செய்யப்படும்.

ஜெயலலிதா உட்பட், நான்கு பேர் மற்றும் சில கம்பனிகள் பெயரில் வாங்கப்பட்டுள்ள சொத்துக்களை எல்லாம், மாநில அரசு பறிமுதல் செய்ய வேண்டும்.

குற்றவாளிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்படும் அபராதத் தொகையில், 5 கோடி ரூபாவை வழக்குச் செலவுகளுக்காக, கர்நாடக மாநில அரசுக்கு வழங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்கள் அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்டனர்!

தமிழக முதல்வர் பன்னீர் செல்வத்துக்கு ஆதரவளித்த அமைச்சர் 'மாபா'பாண்டியராஜன், முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், கே.பி. முனுசாமி உள்ளிட்ட 18 பேரை கட்சியிலிருது நீக்க பொதுச் செயலாளர் சசிகலா உத்தரவிட்டுள்ளார்.

கட்டாயப்படுத்தி தன்னை முதல்வர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய வைத்தார்கள் என்று முதல்வர் பன்னீர் செல்வம் அளித்த பரபரப்பான பேட்டியைத் தொடர்ந்து, தமிழக அரசியல் களம் சூடு பிடித்தது.

இதனையடுத்து, முதல்வர் பன்னீர்செல்வத்துக்கு தொடர்ந்து அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் நேரில் சென்று ஆதரவளிக்கத் தொடங்கினார்கள். அவர்களில் தற்போதைய மற்றும் முன்னாள் அமைச்சர்களும் அடங்குவர்.

இந்நிலையில், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா உள்ளிட்ட மூன்று பேரும் குற்றவாளிகள் என்று உச்ச நீதிமன்றம் நேற்றுக் காலை தீர்ப்பளித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து முதல்வர் பன்னீர்செல்வத்துக்கு ஆதரவளித்த அமைச்சர் 'மாபா'பாண்டியராஜன், முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி உள்ளிட்ட 18 பேரைக் கட்சியில் இருந்து நீக்கப் பொதுச் செயலாளர் சசிகலா உத்தரவிட்டுள்ளார்.

# மனக்கசப்பை மறந்து ஒற்றுமையாகச் செயற்படுவோம்: அ.தி.மு.கழக எம்.எல்.ஏக்களுக்கு ஓ.பி.எஸ். அழைப்பு



சென்னை, பெப்.15

தற்காலிகமாக நமக்கிடையே ஏற்பட்ட சில கசப்பான நிகழ்வுகளை மறந்து நாம் அனைவரும் எப்போதும் போல ஒற்றுமையுடன் செயற்படுவோம் என்று அ.தி.மு. கவின் எம்.எல். ஏக்களுக்குப் பொறுப்பு முதல்வர் ஓ.பி.எஸ். அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட கடித வடிவிலான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எனது அன்புக்குரிய அ.தி.மு.க. அமைச்சர்களே, அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் அன்பான வேண்டுகோள்!

எம்.ஜி.ஆரால் ஆரம்பிக்கப்பட்டு, ஜெயலலிதாவால் கட்டிக்காத்து, வளர்க் கப்பட்டு வந்த நமது மாபெரும் அ.தி.மு.க. இயக்கத்தைச் சேர்ந்த சுமார் ஒன்றரைக் கோடி உறுப்பினர்களும் ஒட்டு மொத்தமாகத் தொடர்ந்து ஏகோபித்த ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

ஜெயலலிதா மறைந்த அன்று இரவு உங்கள் அனைவராலும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கனத்த இதயத்துடன் முதல்வராகப் பதவியை ஏற்று, உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடு ஜெயலலிதா வழியில், கடந்த இரண்டு மாதங்களாக அனைத்து தரப்பினரும் பாராட்டும் வகையில், ஜெயலலிதாவின் ஆட்சியை அவர் இல்லை என்ற குறை பொதுமக்களுக்கு தெரியாதவாறு தொடர்ந்து நடத்தி வந்தோம். ஜெ.யின் ஆட்சியை அனைத்து தரப்பினரும் பாராட்டி வந்தனர்.

நாம் யாரும் எதிர்பாராத வகையில் நடந்த ஒரு சில கசப்பான நிகழ்வுகளால் கடந்த சில நாள்களாக நமது ஜெ.யின் ஆட்சி மீதமுள்ள ஆண்டுகளுக்குத் தொடர்வதில் தற்காலிக இடையூறு மட்டுமே ஏற்பட்டுள்ளது.

எனவே, தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இடையூறை நீக்கி, நாம் அனைவரும் ஒன்றுமையுடன் இருந்து கழகத்துக்கு எவ்வித ஊறும் ஏற்படாமல் காத்து ஜெயலலிதாவின் நல்லாட்சி தொடரத் தேவையானவற்றை நம் மனச்சாட்சிபடி உடனடியாக மேற்கொள்ள வேண்டியது நமது அனைவரினதும் கடமையாகும்.- என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 21 ஆண்டுகளுக்குப் பின் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது!

## தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்



சொத்துக்குவிப்பு வழக்கில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என்று தி.மு..க செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஸ்டாலின் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சொத்துக்குவிப்பு வழக்கில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. முன்பு நீதிபதி குன்ஹா தந்த தீர்ப்பு அப்படியே நிலைநாட்டப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்புமிக்க வகையில் இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.


அரசியல்வாதிகள் தூய்மையானவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு இந்தத் தீர்ப்பு சான்றாகும்.

தீர்ப்பு வந்துவிட்ட காரணத்தால் நிலையான ஆட்சியை அரசியல் சாசன சட்டப்படி தமிழகத்தில் உருவாக்குவதற்கு, ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றும் கூறியுள்ளார்.

# சொத்து குவிப்பு வழக்கு!

# கடந்துவந்த பாதை!


சசிகலா


சுதாகரன்


இளவரசி


ஜெயலலிதா

சென்னை, பெப்.05

**1996 ஜூன் 14:** 1991 - 1996 வரை தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா வருமானத்துக்கு அதிகமாக, 66 கோடி ரூபாக்கு சொத்து சேர்த்தார் என சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சுப்பிரமணியசுவாமி வழக்குத் தொடுத்தார்.

**ஜூன் 51:** மனுவை விசாரித்த நீதிபதி, தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை டி.ஜி.பி.,யாக இருந்த லத்திகா சரணை விசாரிக்க உத்தரவிட்டார். விசாரணைக்குப் பிறகு ஜெயலலிதா கைது செய்யப்பட்டார். பின் பிணையில் வெளிவந்தார். சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது.

**1997 ஜூன் 4:** ஊழல் தடுப்புச் சட்டத்தில் ஜெயலலிதா மீது வழக்குத் தொடரப்பட்டதோடு, மூன்றாவது சிறப்பு நீதிபதி பி.அன்பழகன் முன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வருமானத்துக்கு பொருந்தாத வகையில் சொத்துக் குவித்ததார்கள் என்று ஜெயலலிதாவின் தோழி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வழக்கில் ஜெயலலிதா முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டார்.

**1997:** மூன்று நீதிபதிகள் கொண்ட சிறப்பு நீதிமன்றத்தை தமிழக அரசு அமைத்தது. பல்வேறு நீதிமன்றங்களில் நடந்து வந்த, 48 வழக்குகளை ஒன்று சேர்த்து, சொத்துக்குவிப்பு வழக்காக விசாரிக்க உத்தரவிடப்பட்டது. சிறப்பு நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.சம்பந்தம், வி.ராதாகிருஷ்ணன், பி.அன்பழகன் ஆகியோர் வழக்குகளை விசாரித்தனர்.

**ஒகஸ்ட், 14:** தன் மீதான விசாரணைக்கு தடை விதிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜெ., மனு.

**2003நவ., 18:** ஜெயலலிதா முதல்வராக இருக்கின்றார் எனவும் இதனால், வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்று தி.மு.க., பொதுச்செயலாளர் அன்பழகன், உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். வழக்கை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

**2004பெப்., 14:** பெங்களூர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடங்கியது.

**ஜூன் 14:** சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரிய ஜெயலலிதாவின் மனுவை கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**2011 ஜூலை 29:** ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கை விசாரிக்க கர்நாடக உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

**2011 ஒக.12:** சொத்துக் குவிப்பு வழக்கில் நேரில் ஆஜராவதில் இருந்து ஜெயலலிதாவுக்கு விலக்கு அளிக்கக் கோரிய மனுவை தள்ளுபடி செய்த சிறப்பு நீதிமன்றம், வீடியோ கொன்பரன்ஸ் மற்றும் எழுத்து மூலமாக வாக்கு மூலத்தை பதிவு செய்ய அனுமதி அளித்தது.

**2011 செப்:** அரசு தரப்பில் 259 சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நிலையில், அது தொடர்பாக விளக்கமளிக்க ஜெயலலிதா நேரில் ஆஜராக வேண்டும் என சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**2011 ஒக்., 20 - 21:** பெங்களூர் தனி நீதிமன்றத்தில் ஜெயலலிதா நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்.

**நவ., 8:** ஜெயலலிதா 3வது முறையாக சொத்துக் குவிப்பு வழக்கில் நேரில் ஆஜ ரானார். 580 கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

**நவ., 9:** மீதமிருந்த 192 கேள்விகளுக்கு பதிலளித்தார். மொத்தம் 1339 கேள்விகளுக்கு பதிலளித்தார்.

**2014 ஒக்., 29:** வழக்கில் இறுதி வாதம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து செப்., 20 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதி டி.குன்ஹா அறிவித்தார்.

**செப்., 12:** பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக, நீதிமன்றத்தை பரப்பன அக்ரஹாரா கோர்ட்டுக்கு மாற்ற வேண்டும் என ஜெ., தரப்பு மனு. இதையடுத்து தீர்ப்பு செப்., 27க்கு தள்ளிவைக்கப்பட்டது.

**2014 செப்., 27:** சொத்துக் குவிப்பு வழக்கில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா தீர்ப்பு வழங்கினார். ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேருக்கும் 4 ஆண்டு சிறைதண்டனை. ஜெ.,வுக்கு ரூ. 100 கோடி, சசிகலாவுக்கு ரூ. 10 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. நான்கு பேரும் பரப்பன அக்ரஹாரா ஜெயிலில் அடைக்கப்பட்டனர்.

**செப்., 29:** கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா பிணை மனு தாக்கல்.

**ஒக்., 1:** மனு ஏற்க நீதிபதி மறுப்பு 6 நாள்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**ஒக்., 7:** பிணை வழங்க மறுத்து, மனுவை கர்நாடக உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**ஒக்., 17:** இதையடுத்து உச்சநீதிமன்றத்தில் பிணை மனுத் தாக்கல் செய்தனர். அவர்களுக்குப்பிணை வழங்கப்பட்டது.

**2015 ஜன., :** சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, கர்நாடக உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா மேல்முறையீடு தாக்கல். மனுவை விசாரிக்க சிறப்பு அமர்வு நியமிக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்குள் விசாரணையை முடித்து தீர்ப்பு வழங்க உச்சநீதிமன்றம் உத்தரவு.

**ஜன., 3:** தி.மு.க., பொது செயலர் அன்பழகன் தன்னையும் இவ்வழக்கில் மனுதாரராக சேர்க்க நீதிபதியிடம் மனு. மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

**ஜன., 5:** விசாரணை தொடங்கியது.

**மார்., 11:** விசாரணை நிறைவடைந்தது.

**மார்:** அரசு வழக்கறிஞர் பவானி சிங்கை மாற்றக்கோரி உச்சநீதிமன்றத்தில் அன்பழகன் தரப்பு மனுத்தாக்கல். இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார்கள். இதனால் இம்மனு சிறப்பு அமர்வுக்கு மாற்றப்பட்டது.

**ஏப்., 27:** உச்சநீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு, அரசு வழக்கறிஞராக பவானிசிங்கை நியமித்தமை செல்லாது எனவும், அவரது வாதத்தை நீதிபதி குமாரசாமி ஏற்கக்கூடாது எனவும் தீர்ப்பு வழங்கினர். மேலும் கர்நாடக அரசு, புதிதாக அரசு வழக்கறிஞரை நியமனம் செய்யலாம். அவர் எழுத்து மூலம் தனது வாதத்தை வழங்கவும் உத்தரவு. மேலும் அன்பழகன் தரப்பும் எழுத்து மூலம் வாதத்தை வழங்க உத்தரவு.

**ஏப்., 28:** கர்நாடக அரசு வழக்கறிஞராக ஆச்சார்யா நியமனம். அவர் தனது வாதத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்தார்.

**மே 11:** ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு மனுவில் கர்நாடக உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. நான்கு பேரும் விடுதலை செய்யப்பட்டனர்; அபராதமும் ரத்து.

**மே. 23:** தமிழக முதல்வராக ஜெயலலிதா மீண்டும் பதவியேற்பு.

**ஜூன்.23:** ஜெயலலி... விடுதலையான தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் கர்நாடக அரசு மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது.

**2016 டிச. 5:** முதல்வராக இருந்த ஜெயலலிதா மறைந்தார்.


**2017 பெப். 14:** மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பை ரத்து செய்து, சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அளித்த தீர்ப்பை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது. இதன்படி ஜெயலலிதா மறைந்ததால் அவர் விடுவிக்கப்பட்டார். சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவருக்கும் நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும், 10 கோடி ரூபா அபராதம் விதிக்கப்படுகிறது. (க)

## சசிகலா முயற்சி தோல்வி அடைந்தது; தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன்

சென்னை:, பெப்.15

சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா முயற்சி தோல்வியடைந்துள்ளது என்று தி.மு.க., பொதுச்செயலாளர் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா முதல்வராக இருப்பதால், சொத்துக் குவிப்பு வழக்கை வேறு மாநிலத்துக்கு மாற்ற வேண்டும் என்று தி.மு.க., பொதுச் செயலாளர்



அன்பழகன், உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தண்டனை எதிர்பார்த்ததுதான்; சுப்பிரமணியசுவாமி கூறுகிறார்!


சென்னை, பெப்.15

சொத்துக் குவிப்பில் தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நான் எதிர்பார்த்தது தான் என்று பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தத் தீர்ப்பு மகிழ்ச்சி அளிக்கிறது. குற்றவாளிகள் 3 பேரும் உடனடியாகச் சரணடைய வேண்டும்.

இந்தத் தீர்ப்பை நான் எதிர்பார்த்தது தான். இந்த தண்டனையிலிருந்து அவர் தப்பிப்பார் என நான் நினைக்க



வில்லை. - என்றும் தெரிவித்துள்ளார். (க)

# பாகிஸ்தானில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்; பொலிஸ் அதிகாரிகள் உட்பட 13 பேர் சாவு!





இஸ்லாமாபாத், பெப்.15

பாகிஸ்தான் சட்டசபைக்கு முன்னால் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரிகள் உட்பட 13 பேர் பலியாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட மருந்து சட்டப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருந்து தயாரிப்பாளர்கள் லாகூரில் உள்ள பஞ்சாப் மாகாண சட்டசபைக்கு முன்னால் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவர்களுடன் பொலிஸ் அதிகாரிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது மோட்டார் சைக்கிளுடன் போராட்டக்காரர்கள் கும்பலுக்குள் தற்கொலை படை தீவிரவாதி புகுந்துள்ளார். இதனையடுத்து தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்து தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டன.

இந்தத் தாக்குதலில் 13 பேர் பலியாகினர். 73 பேர் காயமடைந்தனர். பலியானவர்களில் 5 பேர் பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் போக்குவரத்து பொலிஸ் தலைமை அதிகாரி அகமது மொபீன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷாகித் கோன்டல் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

காயம் அடைந்தவர்களில் 11 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலுக்கு ஜமாத்- வுர்-அக்ரகர் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது. அது தலிபான் தீவிரவாதிகளுடன் தொடர்புடையது என்பது குறிப்பிடத்தக்கது. தீவிரவாதிகளின் இத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மார்ச் 27 ஆம் திகதி லாகூர் குல்ஷான்-இ-இக்பால் பூங்காவில் நடந்த தாக்குதலில் 75 பேர் பலியாகியிருந்தனர். இந்தத் தாக்குதலுக்கும் தற்போது தாக்குதல் நடத்தியுள்ள ஜமாத்-வுர்-அக்ரகர் அமைப்பே பொறுப்பேற்றிருந்தது.



## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புடன் கனடா பிரதமர் ட்ருடியு சந்திப்பு

வொஷிங்டன், பெப்.15

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடியு சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன.

பின்னர் இருநாட்டுத் தலைவர்களும் கூட்டாக ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றியுள்ளனர்.

## தாய்வானில் சுற்றுலா பஸ் தீப்பிடித்ததால் 32 பேர் பலி!



தைபே, பெப்.15

தாய்வானில் சுற்றுலா பஸ் ஒன்று தீப்பிடித்து எரிந்ததால் 32 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர். மேலும் 12 பேர் ஆபத்தான நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாய்வான் தலைநகர் தைபே அருகே சுற்றுலா பஸ் ஒன்றில் 44 பேர் பயணித்துள்ளனர். அதிவேகமாக சென்ற பஸ் வீதியின் குறுக்கே வைக்கப்பட்டிருந்த தடுப்பின் மீது மோதிக் கவிழ்ந்துள்ளது.

அப்போது மோதிய வேகத்தில் பஸ் தீப்பிடித்து எரிந்துள்ளது. தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் அங்கு விரைந்து சென்றுள்ளனர்.

இந்த விபத்தில் 30 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகிப் பலியாகியுள்ளனர். இருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளனர். பலியானவர்களில் 20 முதல் 60 வயது உடையவர்கள் அடங்குவர். அவர்கள் அனைவருமே தாய்வானைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும், காயமடைந்த 12 பேருக்கும் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்று அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் பதவி விலகினார்!

வொஷிங்டன், பெப்.15

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளின் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அமெரிக்காவின் ரஷ்ய தூதுவருடன் மேற்கொண்ட தொலைபேசி தொடர்புகளில் நிர்வாகத்துக்குத் தவறான தகவல்களை வழங்கினார் என்று எழுந்த குற்றச்சாட்டுகளையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளின் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு முன்னரே, அமெரிக்கா, ரஷ்யா மீது விதித்திருக்கும் தடைகளை அகற்றுவது குறித்து அமெரிக்க சட்டத்துக்கு எதிரான வகையில், ரஷ்ய தூதுவருடன் கலந்துரையாடினார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜெனெரல் கெய்த் கெல்லோக் தற்காலிக தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று வொஷிங்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரான்ஸுக்குச் செல்கிறார் பிரித்தானிய இளவரசர்!



பரிஸ், பெப்.15

பிரித்தானியா இளவரசி டயானா உயிரிழந்து 20 ஆண்டுகள் நிறைவடைந்தமையை முன்னிட்டு அவரது மகன் இளவரசர் வில்லியம், பரிஸ் நகருக்குச் செல்லவுள்ளார்.

இளவரசி டயானா கடந்த 1997ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸில் நகரில் நடந்த கார் விபத்தில் உயிரிழந்தார்.

அவர் இறந்து 20 வருடங்கள் நிறைவடைந்தமையை முன்னிட்டு பரிஸ் நகருக்கு டயானாவின் மகனும், இளவரசருமான வில்லியம் அவர் மனைவி இளவரசி கேட் உடன் எதிர்வரும் மார்ச் மாதத்தில் செல்லவுள்ளார்.

மார்ச் 17 மற்றும் 18 ஆகிய இரு நாள்கள் அவர்கள் அங்கு தங்குவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தன் தாய் இறந்த பின்னர் தற்போது தான் வில்லியம் முதல் தடவையாக பரிஸுக்குச் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லியம், கேட் தம்பதிகள் பரிஸில் எட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வடகொரியாவைக் கடுமையாக அணுகுவோம்; அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை!



வொஷிங்டன், பெப்.15

அணு ஆயுத சோதனை நடத்தி வரும் வடகொரியா மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பல நாடுகளின் எதிர்ப்புகளை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை, அணுஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது.

கண்டம் விட்டுக்கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா மீண்டும் சோதனை செய்துள்ளது. வடக்கு பியோங்கன் பிராந்தியத்தில் இருந்து இந்த ஏவுகணை பங்க்யான் ஏவுதளத்தில் இருந்து ஜப்பானின் கடல் எல்லையில் விழும்படி வடகொரியா சோதனை செய்தது.

தடையை மீறி மீண்டும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை சோதனை செய்த வடகொரியாவுக்கு ஜப்பான் கடும் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில், அணு ஆயுத சோதனை நடத்தி வரும் வடகொரியா மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், கனடா பிரதமர் உடனான ஊடகவியலாளர் சந்திப்பின் போது, வடகொரியா ஒரு பெரிய பிரச்சினை, அதனை நாங்கள் மிகவும் கடுமையாக அணுகுவோம் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, ஜப்பானுக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# இலங்கை 'ஏ' அணிக்கு தலைவரானார் தனஞ்செய!



கொழும்பு, பெப்.15

இலங்கைக்கு கிரிக்கெட் விஜயம் செய்துள்ள இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள உத்தியோகபற்றற்ற நான்கு நாள் டெஸ்ட் போட்டிகளிலும் ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடவுள்ள இலங்கை 'ஏ' அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை 'ஏ' அணிக்கு தனஞ்செய டி சில்வா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் உட்பட டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனுபவசாலிகளான திமுத் கருணாரட்ன, டில்ருவன் பெரேரா, உதார ஜயசுந்தர ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், சர்வதேச ஒருநாள் அல்லது சர்வதேச இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடிய ஐவர் அணியில் இடம்பெறுகின்றனர்.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது நான்கு நாள் உத்தியோகப்பற்றற்ற டெஸ்ட் போட்டி பல்லேகலை சர்வதேச விளையாட்டரங்கில் இம்மாதம் 17ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையும் இரண்டாவது போட்டி ரங்கிரி தம்புள்ள சர்வதேச விளையாட்டரங்கில் பெப்ரவரி 24 முதல் 27 வரையும் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஐந்து உத்தியோகப்பற்றற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ரங்கிரி விளையாட்டரங்கில் மார்ச் 2 ஆம் திகதியும் 4 ஆம் திகதியும் இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. மூன்றாவது போட்டி குருநாகலில் மார்ச் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடைசி இரண்டு போட்டிகள் சி.சி.சி. மைதானத்தில் மார்ச் 9, 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இலங்கை 'ஏ' அணியில் சந்திமால் தலைவராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும், டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளமை இலங்கை அணி மீதான பார்வையை அதிகரித்துள்ளது.

இலங்கை 'ஏ' அணியின் விவரம் வருமாறு:-

தனஞ்செய டி சில்வா (அணித் தலைவர்), திமுத் கருணாரத்ன, டில்ருவன் பெரேரா, உதார ஜயசுந்தர, ஜெவ்றி வெண்டர்சே, அமில அப்போன்சோ, லஹிரு கமகே, சந்துன் வீரக்கொடி, கசுன் ரஜித்த, மலிந்த புஷ்பகுமார, சரித் அசலன்க, அசித்த பெர்னாண்டோ, ரோஷேன் சில்வா, கசுன் மதுஷன்க, ராம் சந்த்ரகுப்தா. (க)

# இங்கிலாந்து டெஸ்ட் அணியின் புதிய தலைவராகிறார் ஜோ ரூட்!



லண்டன், பெப்.15

இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக ஜோ ரூட் நியமிக்கப்பட்டுள்ளார்.

டெஸ்ட் அணித் தலைவர் பதவியிலிருந்து அலஸ்டெயார் குக் விலகிக் கொண்ட பின்னர் அவரது இடத்தை ஜோ ரூட்தான் நிரப்புவார் என அனுமானங்கள் வெளியிடப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் அவர் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் கூடி ஜோ ரூட்டை புதிய டெஸ்ட் அணித் தலைவராக நியமித்தது.


யோர்க் ஷயர் பிராந்திய துடுப்பாட்ட வீரரான 26 வயதுடைய ஜோ ரூட், 2012 இல் டெஸ்ட் அரங்கில் அறிமுகமானமை முதல் 4,594 ஓட்டங்களை மொத்தமாகப் பெற்றுள்ளார்.

இவர் இங்கிலாந்தின் 89 ஆவது டெஸ்ட் அணித் தலைவராகின்றார்.

எனினும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக லோர்ட்ஸ் விளையாட்டரங்கில் எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டியிலேயே அவர் தலைவராக விளையாடவுள்ளார்.

அணித் தலைவராக போதிய அனுபவம் இல்லாத ரூட், நான்கு முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் மாத்திரமே தலைவராக விளையாடியுள்ளார்.

# மற்றொரு பாக். வீரருக்கும் விளையாடுவதற்குத் தடை



இஸ்லாமாபாத், பெப்.15

ஐக்கிய அரபு எமிரேட்டில் விளையாடிய பாகிஸ்தான் வீரர்கள் இருவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து அந்நாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்தது.

தற்போது மேலும் ஒரு வீரருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. ஐக்கிய அரபு எமிரேட்டில் பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டி இடம்பெற்று வருகிறது. இதில் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று பாகிஸ்தான் வீரர்கள் ஷர்ஜீல்கான், காசித் லத்தீப் மீது புகார் எழுந்தது.

இதையடுத்து இருவருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்தது.

இந்த நிலையில் மேலும் ஒரு பாகிஸ்தான் வீரர் சிக்கி உள்ளார். பாகிஸ்தான் அணியில் தொடர்ந்து வீரராக விளையாடிய நசீர் ஜாம்ஷெத் மீது சூதாட்ட குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து அவருக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்: ஷமி, ரோகித் சர்மாவுக்கு இடமில்லை!

டில்லி, பெப்.15

ஆஸ்திரேலியாவிற்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் ஷமி மற்றும் ரோகித் சர்மாவுக்கு இடம் வழங்கப்படவில்லை.

இந்தியா- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற இருக்கின்றன. முதல் டெஸ்ட் 23 ஆம் திகதி புனேயில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தொடருக்காக ஆஸ்திரேலியா அணி நேற்று முன்தினம் இந்தியாவுக்குச் சென்றுள்ளது.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான



முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் அணிக்கெதிராக விளையாடிய அதே அணிதான் அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக இடம் பெறாமல் இருந்த முகம்மது ஷமி மற்றும் ரோகித் சர்மா அணியில் இடம் பெறவில்லை.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக முதல் இரண்டு போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

விராட் ஹோக்லி (அணித் தலைவர்), முரளி விஜய், லோகேஷ் ராகுல், புஜாரா, ரகானே, சகா, அஸ்வின், ஜடேஜா, இசாந்த் ஷர்மா, புவனேஸ்வர் குமார், உமேஷ் யாதவ், கருண் நாயர், ஜயந்த் யாதவ், . குல்தீப் யாதவ், அபிநவ் முகுந்த், ஹர்திக் பாண்டியா.

பங்களாதேஷ் டெஸ்டுக்கு தகுதிபெறாத அமித் மிஸ்ராவும் அணியில் இடம்பெறவில்லை.

# தெல்லிப்பழை மகாஜன, சுன்னாகம் ஸ்கந்தா அணிகளுக்கு இடையில் துடுப்பாட்டப் போட்டி!

யாழ்ப்பாணம், பெப்.15

தெல்லிப்பழை மகாஜன மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளுக்கு இடையேயான 17 ஆவது "வீரர்களின் போர்" துடுப்பாட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 17,18,19 ஆகிய திகதிகளில் காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகும் இந்தப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இத்துடுப்பாட்டப் போட்டிகளுக்கு மகாஜனக் கல்லூரி அதிபர் மணிசேகரன் மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செல்வஸ்தான் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர். (8)

# அரை இறுதிக்குத் தகுதி பெற்றது கிங் ஸ்ரார்!

யாழ்ப்பாணம், பெப்.15

கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் மாவட்ட மட்டத் துடுப்பாட்டத் தொடர் ஒன்றை நடத்தி வருகின்றது. கடந்த 11 ஆம் திகதி மின்னொளியில் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சங்கானை கிங் ஸ்ரார் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வீனஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 7 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 56 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக விமல் 23 ஓட்டங்களையும், நிரோஜன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

கிங் ஸ்ரார் அணி சார்பாக சூரி 3, அயன் 1, கிரு 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். 57 வெற்றி இலக்கெனக் களமிறங்கிய கிங் ஸ்ரார் அணி 7 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புடன் இலக்கை எட்டியது. அணி சார்பாக திலக்சன் 44 ஓட்டங்கள் பெற்றுக் கொடுக்க கிங் ஸ்ரார் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது. (க - 8)

காலைக்கதிர்



# கேப்பாபிலவு மக்கள் போராட்டத்துக்கு கல்விச் சமூகத்தினரது ஆதரவு தேவை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. வேண்டுகோள்

முல்லைத்தீவு, பெப்.15

கேப்பாபிலவு மக்கள் போராட்டத்துக்கு கல்விச் சமூகத்தினரது ஆதரவு அவசியம் தேவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா, கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க. பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

கேப்பாபிலவு பிலக்குடியிருப்பைச் சேர்ந்த 84 குடும்பங்கள், விமானப்படையினர் சுவீகரித்துள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, விமானப்படை முகாமுக்கு முன்பாகத் தொடர்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஈடுபட்டுள்ளதால் அவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒரு மனிதனுக்கு காணியும், கல்வியும் அடிப்படை மனித உரிமைகள் ஆகும். மறுக்கப்பட்டுள்ள இந்த உரிமைகளுக்காகப் போராடும் அந்த மாணவர்களுக்கு உறுதுணையாக அனைத்து மாணவர்களும், கல்விசமூகத்தினரும் ஆதரவு வழங்க வேண்டும். என்றார்.

இந்த விளையாட்டுப் போட்டி அதிபர் இ.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் வவுனியா வடக்குக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) திருமதி மாலதி முகுந்தன், வவுனியா வடக்கு கல்வி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் (உடற்கல்வி) மங்களகுமார், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ரவிச்சந்திரன், மற்றும் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர்கலந்து கொண்டனர்.

### முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய அறிவித்தல், சம்பந்தப்பட்ட ஆதரவு உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியலோடு பக்ஸ் மூலம் உடனடியாக ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பின்னர் நேற்றுப் பிற்பகல் எடப்பாடி பழனிச்சாமி, மூத்த அமைச்சர்கள் ஒன்பது பேருடன் கூவத்தூரில் இருந்து புறப்பட்டு ஆளுநர்மாளிகையில் ஆளுநர் வித்தியாசாகர் ராவைச் சந்தித்து ஆட்சி அமைப்பதற்கு உரிமை கோரும் கடிதத்தைக் கையளித்தார்.

தங்களது அ.தி.மு.க. அணி மீண்டும் ஆட்சி அமைக்கும் வரை தங்களது அணி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் கூவத்தூர் விடுதியில் ஒன்றாகத் தங்கியிருப்பர் என்றும், சட்டசபை கூடும் வரை அவர்கள் அங்கேயே இருப்பார்கள் என்றும் அந்த அணி சார்பில் நேற்று ஊடகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### சசிகலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு வெளியே கூவத்தூரில் சசிகலாவும், அவருக்கு ஆதரவாளரான சுமார் 125 அ.தி.மு. கழக எம்.எல்.ஏக்களும் தங்கியிருந்த விடுதிக்குள் பொலிஸ் அதிரடியாக நுழைந்தது.

எம்.எல்.ஏக்களையும் சசிகலாவையும் தவிர ஏனையோரை அங்கிருந்து வெளியேற்றி, அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் சுதந்திரமாகச் செயற்படும் வாய்ப்பை ஏற்படுத்தும் நடவடிக்கையைப் பொலிஸார் ஏற்படுத்தினர் என்று கூறப்பட்டது.

நேற்றுத் தீர்ப்பை வாசித்த புதுடில்லி உச்ச நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், அந்த நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தண்டனையை அனுபவிப்பதற்காக உடனடியாகச் சரணடைய வேண்டும் என்றும் அறிவித்தது.

இந்த வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஏற்கனவே பெங்களூரு நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட போதிலும், அவர் இறந்துவிட்டதால், வழக்கிலிருந்து அவரது பெயர் விடுவிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறைத்தண்டனையிலிருந்து ஜெயலலிதா விடுவிக்கப்பட்ட போதிலும் அவருக்கு எதிரான அபராதம் அறவிடப்படும் என்றும் –

அவரது சொத்துக்களை அரசுடமையாக்கும் உத்தரவு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் – தெரிவிக்கப்படுகின்றது. (உ)

### கனகபுரம் துயிலுமில்லம் காணியில்

# தனியார் ஒருவர் அமைத்த வேலியை பிடுங்கி எறிந்தது பிரதேச செயலகம்



கிளிநொச்சி, பெப்.15

கிளிநொச்சி, கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் காணியில் நேற்று செவ்வாய்க்கிழமை தனியார் ஒருவரால் வேலி அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்த விடயத்தை அறிந்து அங்குசென்ற கரைச்சிப் பிரதேச செயலகத்தினர், வேலி அமைப்புப் பணிகளை நிறுத்தியதுடன் நடப்பட்டிருந்த கதியால்களையும் பிடுங்கி எறிந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:

கனகபுரம் துயிலுமில்லம் காணியில் ஒரு பகுதி தனக்குச் சொந்தமானது எனத் தெரிவித்த நபர் ஒருவர், கூலியாள்களைக் கொண்டு கம்பி, கட்டைகள் போடப்பட்டு வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். கடந்த நவம்பர் மாதம் மாவீரர் நாள்நிகழ்வில் பொதுச்சுடரேற்றி நிகழ்வு நடத்தப்பட்ட இடத்துக்கு அருகில் எல்லையிட்டு வேலி அமைக்கும் பணியில் ஈடுப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச செயலகத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அமைக்கப்பட்ட வேலிகளை பிடுங்கி எறிந்ததோடு, வேலி அமைக்கும்பணியையும் நிறுத்தியுள்ளனர். (ஜ - 70)

### அதிகாரத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை நடத்தி பொதுமக்களின் அனுமதி பெறப்படவேண்டும்.

நாடாளுமன்ற அதிகாரம், நீதித்துறை அதிகாரம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் தேர்தல் முறைமை என்பவற்றில் முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பொதுமக்களின் அனுமதியின்றி அவற்றை மேற்கொள்ள முடியாது என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

புதிய அரசமைப்புத் திருத்தத்துக்குப் பொதுமக்கள் அனுமதி வழங்குவார்கள். அத்துடன், சமஷ்டி முறையிலான தீர்வு தொடர்பில் தற்போதுள்ள பிழையான கருத்தைச் சரிசெய்ய வேண்டியதும் அவசியம் எனவும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார். (ம)

### கேப்பாப்பிலவு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

சந்தித்து நேற்றுத் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனும் தாம் நேரில் நடத்திய பேச்சுக்களை அடுத்து காணிகளை மக்களிடம் விடுவிப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் அமைச்சர் சுவாமிநாதனிடம் உறுதியளித்தனராம். அதனை அமைச்சர் சுவாமிநாதன் தனக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என்றும் அரச அதிபர் கூறினார்.

ஆனால், இவ்வாறு பல உறுதிமொழிகளைக் கேட்டுத் தாங்கள் சலித்து, ஏமாந்துபோயுள்ளனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர். தமது காணிகளுக்குள் தாங்கள் கால்பதிக்கும் வரை தங்களின் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், இந்த மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தென்னிலங்கையிலிருந்து சர்வமதக் குழு ஒன்று நேற்று கேப்பாபிலவுக்கு வந்திருந்தது.

### இளவாலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு

# மாணவி மீது அசிட் வீசப்பட்ட வழக்கு நேற்று தாயாரின் வாக்குமூலம் பதிவு

இளவாலைப் பகுதியில் அசிட் வீசப்பட்டதால் பாதிக்கப்பட்ட மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் இடம்பெற்றது. விசாரணையில், உயிரிழந்த மாணவியின் தாய் சாட்சியளித்திருந்த நிலையில் வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் மேலதிக சாட்சியாளர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2010ஆம் ஆண்டு தமது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த மாணவி மீது இனம் தெரியாதவர்கள் அசிட் வீசிவிட்டுத் தப்பிச்சென்றனர். இதில் படுகாயமுற்ற மாணவி 55 நாள்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் காதல் விவகாரத்தால் இடம்பெற்றது எனச் சந்தேகித்த பொலிஸார் அந்த மாணவியைக் காதலித்தவர் எனச் சந்தேகிக்கப்படும் இளைஞன் ஒருவரைக் கைதுசெய்தனர். வழக்கின் மாணவியின் தாயார் முக்கிய சாட்சியாக வாக்குமூலம் அளித்தார்.

'சம்பவம் இடம்பெற்ற அன்று இரவு 9.30 மணியளவில் நான் வீட்டில் சமையலறையில் இருந்தேன். எனது மகள் வீட்டின் இரவு உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தார், அத்தருணம் திடீரென மகள் அலறிய சத்தம் கேட்டது. தனக்கு ஏதோ ஊற்றப்பட்டுள்ளது எனவும் அதனால் உடல் எங்கும் எரிகின்றது எனவும் கூறினார்.

அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தோம். அப்போதுதான் மகள் மீது அசிட் ஊற்றப்பட்டது தெரியவந்தது.

எனினும், யார் அசிட் ஊற்றினார்கள் என நான் காணவில்லை. மகளும் அதை அறிந்திருக்கவில்லை. எனினும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் எனது மகளைக் காதலித்து வந்ததும் தொலைபேசியில் குறுந்தகவல் மூலம் மிரட்டல் விட்டதையும் அறிந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தேன்' – என தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார். (ம)

### ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாம் என அந்தச் சட்ட நிபுணர்களில் இருவர் ஆளுநருக்கு ஆலோசனை தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்ட நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் தமது அவதானிப்புகள் ஆகியவை குறித்து ஆளுநர் வித்தயாசாகர் ராவ் நேற்று மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஏழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொனராகலை, களுத்துறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களே மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

2016 மார்ச், ஏப்ரல் பிரதான விளைச்சல் காலம் வரையில் மிகமோசமான நெருக்கடிக் காலத்தை எதிர்கொள்வதற்கு இலங்கை தயாராக வேண்டியுள்ளது என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் மார்ச், ஏப்ரலில் மேற்கொள்ளப்படும் பெரும்போகமே இலங்கையின் சரித்திரத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளில் மிக மோசமான விளைச்சலைத் தருவதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, ஞானகாந்தன் விளையாட்டு மைதானத்தில் அதிபர் என். மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொள்வார். அவரது பாரியார் மீனா சித்தார்த்தன் பரிசில்களை வழங்குவார். (இ)

* * *

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு, மைதானத்தில் அதிபர் திருமதி மி. விமலநாதன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கதிர்வேல் விஜிதரனும் சிறப்புவிருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர் திருமதி றோகினி பாலஸ்கந்தனும் கலந்து கொள்வர். (இ)

### பன்னீர்...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

யில் பெரும்பான்மையை நிரூபிக்கும் உரிமை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பன்னீர் அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரேயன், மனோஜ்பாண்டியன் ஆகியோர் நேற்றிரவு ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

முன்னதாக நேற்றுக் காலை புதுடில்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான கையோடு, அ.தி.மு.கழக எம்.எல்.ஏக்கள் தங்கியிருந்த கூவத்தூர் விடுதிக்குள் பொலிஸ் அதிரடிப்படை புகுந்தது.

இதனையடுத்து பன்னீர்ச் செல்வமும் அவரது அணியினரும் கூவத்தூரில் தங்கியிருந்த அ.தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க சென்னையிலிருந்து அங்கு புறப்பட்டுச் சென்றனர்.

ஆனால், அவர்கள் அங்கு வரக்கூடாது என அ.தி.மு.கவின் சசிகலா அணி எம்.எல்.ஏக்கள் தெரிவித்தனர் என்று கூறப்பட்டது. அதனால் கூவத்தூரில் பெரும்களேபரம் ஏற்படும் சூழல் ஏற்பட்டது.

இதனையடுத்து, கூவத்தூர் பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பித்த பொலிஸார், பன்னீர் அணியை இடைவழியில் மறித்து கூவத்தூர் செல்ல விடாமல் திருப்பி அனுப்பினர். (உ)

### பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது. மனு மீதான விசாரணை மே 17 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

2015 பொதுத்தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்பை இழந்த சரத் பொன்சேகா பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியாக நியமிக்கப்பட்டு அமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண்டார். (உ)

# இலங்கைக்கு மேலதிக காலக்கெடுவை அனைத்துலக சமூகம் வழங்கக் கூடாது

## தீர்மானம் நிறைவேற்றியது நாடுகடந்த அரசு

பரிஸ், பெப்.15

பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை அரசு தவறியுள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைச் சபை இந்த விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபைக்குப் பாரப்படுத்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைச் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு மேலதிக காலக்கெடுவை அனைத்துலக சமூகம் வழங்கக் கூடாது என்று கோரி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வட கொரிய விவகாரம் போல், இந்தச் சிக்கலை ஐ.நா. பொதுப் பேரவையின் பார்வைக்கு அனுப்புமாறும், மேலும் போர்க் குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்களுக்கான வழக்கை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்ப அல்லது இலங்கை குறித்துச் சிறப்பு அனைத்துலகக் குற்றவியல் தீர்ப்பாயம் அமைக்க பாதுகாப்பு மன்றத்துக்குப் பரிந்துரைக்குமாறும் மனித உரிமை சபையை நாடு கடந்த அரசு கேட்டுள்ளது.

குற்றங்கள் தண்டிக்கப்படாமற் போதல் என்ற வகையில் இலங்கையை வட கொரியாவுடன் ஒப்பிட்டுக் காட்டுகிறது இந்தத் தீர்மானம். வட கொரியா மானிட விரோதக் குற்றங்கள் புரிந்தது என்பதுதான் குற்றச்சாட்டு. ஆனால் இலங்கை போர்க் குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் ஆகிய இருவகையிலும் குற்றம் புரிந்தது என்பது குற்றச்சாட்டு.

வட கொரியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு எதிரான ஆவணச் சான்று மிகவும் விரிவானது, ஆழமானது, தொகையளவில் கூடுதலானது. வடகொரியாவின் செயலின்மை காரணமாக, ஐ.நா. மனித உரிமை சபை அந்த நாட்டை ஐ.நா. பொதுப் பேரவையின் பார்வைக்கு அனுப்பி, அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு வட கொரியாவை அனுப்ப ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குப் பரிந்துரைக்குமாறு பேரவையைக் கேட்டு இந்தத் தீர்மானம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

பிரான்ஸில் இடம் பெற்ற நாடுகடந்த தமிழீழ அரசின் ஆறாவது நேரடி அரசவை அமர்வில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# நாட்டில் பெண் சாரணியத்தை மேம்படுத்த அரசு உதவத் தயார்

## பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு,பெப்.15

எமது நாடு, 1948 ஆம் ஆண்டு பேணப்பட்ட அதே நிலைக்கு மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும். எமக்குச் சுதந்திரம் கிடைத்த எழுபதாவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில், அதனை மனதில் ஆழமாக பதித்துக் கொள்வது இன்றைய தவிர்க்க இயலாத தேவை.

-இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

பெண் சாரணர்களின் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் பெற்ற வேளை, இனவாதமோ, மதவாதமோ இருக்கவில்லை. சகல தரப்பினரும் ஒரு தாய் பிள்ளைகள் போலவே ஒற்றுமையாக வாழ்ந்தனர்-

அந்த வகையில், பெண் சாரணர்களின் இயக்கம், பெண்களின் உரிமைகளை வென்றெடுக்க முன்னணியில் செயற்பட்டதை மறந்துவிட இயலாது - என்று பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பெண் சாரணியத்தை மேலும் மேம்படுத்துவதற்கு, நாட்டின் சகல பிரதேசங்களிலும், சகல பாடசாலைகளிலும் செயற்படுத்துவதற்கான திட்டத்தைத் தந்தால் அதனைச் செயற்படுத்த அரசு வகை செய்யும் - என்றும் பிரதமர் வாக்குறுதி அளித்தார்.

# பிரான்ஸ் நாட்டு மருத்துவக்குழுவுடன் வடக்கு சுகாதார அமைச்சர் சந்திப்பு

வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை அபிவிருத்தி தொடர்பில் பிரான்ஸ் நாட்டு வைத்தியக் குழுவுடன் சந்திப்பொன்று கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சுகாதார துறைசார்ந்த எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# காணாமல் ஆக்கப்பட்டோரைப் பாதுகாக்க வருகின்றது சர்வதேச சாசன சட்டமூலம்!

## வர்த்தமானியில் பிரசுரிக்கவும் நடவடிக்கை

கொழும்பு, பெப்.15

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட அனைவரையும் பாதுகாப்பதற்குச் சர்வதேச சாசன சட்டமூலம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாசனத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு கடந்த ஏழாம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தச் சட்ட மூலம், சட்டமாக ஆக்கப்படுவதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு மே மாதம் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சாசனத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டிருந்தது.

இந்தச் சாசனத்தின் பிரகாரம் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுகின்றமை குற்றவியல் குற்றமாக உள்ளூர் சட்டமாக கொண்டுவர வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இரண்டு கிளர்ச்சிச் செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக 65 ஆயிரம் பேர் வரை காணாமற் போயுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றும் ஒரு நடவடிக்கையாக காணாமல் ஆக்கப்படுகின்றமை குற்றவியல் குற்றமாக்கும் சட்டமூலத்தை அரசு முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதையல் எடுக்க முயன்ற 6 பேர் பொலிஸாரால் கைது

புத்தல, முத்துகெலியாவ வனப் பகுதி மலையில் புதையல் எடுப்பதற்காக அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, இரத்தினபுரி மற்றும் புத்தல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று புத்தல பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் கைது செய்யப்பட்ட தருணத்தில் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சாதாரணதர மாணவருக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.15

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்குத் தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இரு நாள் செயன்முறைப் பயிற்சிப் பட்டறை எதிர் வரும் 18 ஆம் 19ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இரு நாள்களும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்ய முடியும் என் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சைட்டம் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு இல்லையேல் போராட்டம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

சைட்டம்பிரச்சினைக்கு அடுத்த வாரத்துக்குள் நியாயமான தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்க போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் பொதுச் செயலாளர் நவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

சைட்டம் நெருக்கடி மற்றும் அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பாக நாட்டில் கருத்தரங்கு ஒன்றை நடத்தி பொது மக்களுக்குத் தெளிவு படுத்தப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், அரச மருத்துவமனைகளில் கறுப்புக் கொடி ஏந்தி எதிர்ப்பு நடவடிக்கைகளை அரச மருத்துவ சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். எனினும் அமைச்சரின் உத்தரவுக்கு அமைய சில மருத்துவமனைகளில் கறுப்புக் கொடிகள் அகற்றப்பட்டுள்ளன என்றும் அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் பொதுச்செயலாளர் நவிந்த டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சைட்டம் நிறுவனம் வைத்திய சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக செயற்படுமாயின் அந்த நிறுவனத்துக்கு எந்த எதிர்ப்பும் கிடையாது என்று இந்தச் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் நவீன் செய்ஷா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் வரையில், புதிய மாணவர்கள் அனுமதியை 6 மாதங்களுக்குள் கைவிட வேண்டும் என்று சைட்டம் நிறுவனத்துக்கு அறிவிக்கவுள்ளதாக என்று உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களின் எட்டு மருத்துவ பீடங்களின் பீடாதிபதிகளுடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில், உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டீ.சீ. திஸாநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா, அதன் உப தலைவர் பேராசிரியர் பி.எஸ். எம். குணரத்ன மற்றும் அமைச்சர்கள் பலர் பங்கேற்றுள்ளனர். (ஐ)

## பி.பி.ஸியின் கேலிச்சித்திரம்




# அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டங்களை ஆரம்பியுங்கள்

## கேப்பாபிலவு மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, பெப்.15

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களின் நிலம் மீட்புக்கான போராட்டம் நேற்று 15 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. தமது விடயத்தில் அரசு அமைதியாக இருப்பது தொடர்பாக கவலை வெளியிட்ட மக்கள், தமக்கு ஆதரவாக ஏனையோரையும் போராட்டத்தில் ஈடுபட அழைப்பு விடுத்துள்ளனர்.

நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நாள் முதல் பல இடங் களிலும் இருந்து பலரும் வந்து ஆதரவை வெளிப்படுத்து கின்றனர். அவர்களின் ஆதரவு எங்களுக்கு மன ஆறுதலைத் தருகின்றது. ஆனால், அரசு அமைதியாக இருக்கின்றது. அது தொடர்பாக நாங்கள் வேதனை அடைந்துள்ளோம்.

இந்த நிலையில், அனைத்து தரப்பினரும் சேர்ந்து எமக்காக பாரிய போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். அனை வரும் இணைந்து அழுத்தம் கொடுக்கும்போது அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலை ஏற்படும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கிடையில் நேற்று முன்னிரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்குத் தனது ஆதரவை தெரிவித்தார். (ம-81)

# மக்களுக்கு சலுகை விலையில் அரிசியை வழங்க நடவடிக்கை

## ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு



கொழும்பு, பெப்.15

சந்தையில் ஒருபோதும் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் மக்களுக்கு சலுகை விலையில் அரிசியைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஒரு முறைமை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் அரிசி இறக்குமதியாளர்களுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்டுள்ள வரிச்சலுகை அதிகளவில் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்காமல், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் பாதிப்படையாத வகையில், சலுகை விலையில் அரிசியை பெற்றுக்கொடுப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டு அரிசிக்கு இரண்டு உச்ச விலைகளை நிர்ணயிக்கவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தத்தக்க வகையில் ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசியை அரசாங்க களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குகைத்தொழில் வாணிபத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகள் மற்றும் அரிசி விலை தொடர்பான பிரச்சினைகளுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் தொடர்பான முன்மொழிவுகள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, ரிசாத் பதியுதீன், பீ.ஹரிசன், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பீ. அபேகோன் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம)

# கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று

## புதிய பேருந்து நிலையத்துக்கான அமைவிடமும் நேரில் ஆராயப்பட்டது



கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத்தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்திற்கான மத்திய பேருந்து நிலையம் அமைப்பது தொடர்பில் விசேடமாக ஆராயப்பட்டது. பேருந்துநிலையம் அமைப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் மற்றும் அமைவிடம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகாமையில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட இடமும் பார்வையிடப்பட்டது.

நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகம், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், வடமாகாண நகர அபிவிருத்திப் பணிப்பாளர், வடமாகாண தனியார் போக்குவரத்துச் சபைத்தலைவர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தியோகத்தர்கள், மாவட்ட வீதி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-70)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது





எஸ்.நிதர்ஷன்

யாழ்ப்பாணம்,பெப்.15

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயற்பாடுகளைக் கண்டித்தும் பணித்தடை வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நீதியை வழங்க வலியுறுத்தியும் இலங்கை ஆசிரியர் சங்கத்தால் நேற்று இரண்டாவது நாளாகவும் மழைக்குமத்தியிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், செம்மணி வீதியிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்தின் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் நேற்றும் தொடர்ந்த போதிலும் தமது விடயம் தொடர்பாக எந்தவொரு அதிகாரிகளும் அக்கறை எடுக்கவில்லை என போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் இடம்பெறும் எனவும் அவர்கள் கூறினர். (ம)

# கனரக வாகனம் விபத்து



மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் செரமிக்ஸ் பொருள்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த கனரக வாகனம் வீதியை விட்டு விலகி, வீட்டு மதில் மற்றும் தொலைத் தொடர்புக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணி யளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பிறிதொரு வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட போது அதற்கு ஒதுங்கி இடம் கொடுக்கும் போதே இந்த விபத்து ஏற்பட்டது என ஜா-எலயிலிருந்து காத்தான்குடிக்கு, பொருள்களை ஏற்றிச் சென்று கொண்டிருந்த கனரக வாகனத்தின் சாரதி தெரிவித்துள்ளார். (ச)

## பல்கலைக்கு திங்கள் வரை விண்ணப்பிக்கலாம்

பல்கலைக்கழகங்களில் 2016/2017 ஆம் கல்வியாண்டுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்துள்ளார்.

உயர்தரப்பரீட்சையின் விடைத்தாள்களை மீளத்திருத்தும் போது முன்னைவிட சிறந்த பெறுபேறுகள் கிடைக்கும் பட்சத்தில் அந்த மாணவருக்கும் அநீதி ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும். (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.